2022 අගෝස්තු 04
2022 ஆகஸ்ட் 04
04 August 2022

NAOSL

# 2018 අංක 19 දරණ ජාතික විගණන පනතේ 14 වන වගන්තිය ප්‍රකාරව පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කරනු ලබන විගණකාධිපති ත්‍රෛවාර්ෂික වාර්තාව

# 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 14 ஆவது பிரிவின் பிரகாரம் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் மூன்றாண்டு அறிக்கை

# Triennial Report of the Auditor General presented in parliament in terms of Section 14 of the National Audit Act, No. 19 of 2018

එකලොස් වන කාණ්ඩය - 06 (i)
பதினோராவது தொகுதி - 06 (i)
Eleventh Volume - 06 (i)

## මහා නගර සභා
## மாநகர சபைகள்
## Municipal Councils

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE



# 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்கான மூன்றாண்டு அறிக்கை


## மாநகர சபைகள்

| | உள்ளடக்கம் | . |
|---|---|---|
| | அறிமுகம் | பக்க இலக்கம் |
| 01. | கண்டி மாநகர சபை | 07 |
| 02. | நுவரெலியா மாநகர சபை | 13 |
| 03. | மாத்தளை மாநகர சபை | 16 |
| 04. | தம்புள்ள மாநகர சபை | 19 |
| 05. | மாத்தறை மாநகர சபை | 20 |
| 06. | காலி மாநகர சபை | 21 |
| 07. | அம்பாந்தோட்டை மாநகர சபை | 22 |
| 08. | பண்டாரவளை மாநகர சபை | 23 |
| 09. | பதுளை மாநகர சபை | 24 |
| 10. | அநுராதபுர மாநகர சபை | 25 |
| 11. | பொலன்னறுவை மாநகர சபை | 30 |
| 12. | இரத்தினபுரி மாநகர சபை | 31 |
| 13. | கொழும்பு மாநகர சபை | 34 |
| 14. | மொறட்டுவ மாநகர சபை | 38 |
| 15. | நீர்கொழும்பு மாநகர சபை | 39 |
| 16. | கம்பஹா மாநகர சபை | 44 |
| 17. | தெஹிவளை கல்கிஸ்ஸ மாநகர சபை | 47 |
| 18. | கடுவெல மாநகர சபை | 50 |
| 19. | ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே மாநகர சபை | 52 |
| 20. | குருணாகல் மாநகர சபை | 56 |
| 21. | கல்முனை மாநகர சபை | 67 |
| 22. | அக்கரைப்பற்று மாநகர சபை | 70 |
| 23. | யாழ்ப்பாணம் மாநகர சபை | 71 |
| 24. | மட்டக்களப்பு மாநகர சபை | 72 |

உள்ளூராட்சி கட்டமைப்பில் உள்ள உயர்ந்த உள்ளூராட்சி நிறுவனமாக மாநகர சபைகள் உள்ளன. இந்த உள்ளூராட்சி நிறுவனங்களின் கட்டமைப்பின் பிரதான அடிப்படை விதியாக 1947 இன் 16 ஆம் இலக்க மாநகர சபைகள் கட்டளைச்சட்டம் (252 ஆம் அத்தியாயம்) உள்ளது.

மாநகர சபைகளுக்குரிய அடிப்படை இலக்காக பொது மக்களின் சுகாதாரம், பொதுமக்களின் பயன்பாட்டு சேவைகள், பொது வீதிகள் தொடர்பான சகல விடயங்களையும் முறைமைப்படுத்தலும், கட்டுப்படுத்தலும், நிர்வகித்தலும் சராசரியாக பொதுமக்களின் நலன் வசதிகள், நலன்புரி நடவடிக்கைகள் மற்றும் மாநகரத்தின் சுற்றாடல் பாதுகாப்பினை வழங்குதலும் மேம்படுத்துதலும் ஆகும். இந்த மாநகர சபைகளின் பிரதான உள்ளடக்கத்தில் நகர தலைவர்கள், பிரதி நகர தலைவர்கள், வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுகின்ற நியதிகளின் மூலம் அமைச்சரினால் நியமிக்கப்படுகின்ற ஏதோவொரு எண்ணிக்கையான உறுப்பினர்களின் எண்ணிக்கையையும் உள்ளடக்கியுள்ளது.

இலங்கையின் பிரதான மாகாணங்களின் எண்ணிக்கையை மேவுகை செய்யும் வகையில் மாநகர சபைகள் இருபத்தி நான்கை உள்ளடக்கியுள்ளது. மேல் மாகாணத்திற்காக 07 மாநகர சபைகளும், மத்திய மாகாணத்திற்காக 04 மாநகர சபைகளும், கிழக்கு மற்றும் தெற்கு மாகாணங்களுக்காக 03 மாநகர சபைகள் வீதமும், ஊவா மாகாணம், வடமத்திய மாகாணத்திற்காக 02 மாநகர சபைகள் வீதமும், வடமேல், வடக்கு, சப்ரகமுவ மாகாணங்களுக்காக 01 மாநகர சபைகள் வீதமும் தாபிக்கப்பட்டுள்ளது. பின்வரும் வரைபடத்தின் பிரகாரம் மாகாணத்தின் படி மாநகர சபைகளின் பரவல் காண்பிக்கப்படுகின்றது.




(வரைபடம் 1)

2018, 2019 மற்றும் 2020 என்ற மூன்றாண்டுகளுக்கான 24 மாநகர சபைகளின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ஒட்டுமொத்த வருமானம் ரூபா 80,392 மில்லியனாக இருந்ததுடன் இந்த மூன்றாண்டு நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ஒட்டுமொத்த செலவினம் ரூபா 80,443 மில்லியன் ஆகும். 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2020 ஆம் ஆண்டு வரையில் இந்த 24 மாநகர சபைகளினதும் வருமான முன்னேற்றம் 2.6 சதவீதமாக இருந்ததுடன், செலவினத்தின் அதிகரிப்பு 0.8 சதவீதம் ஆகும். 2018 ஆம் ஆண்டு 07 மாநகர சபைகளின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பற்றாக்குறையொன்று காண்பிக்கப்பட்டதுடன் அந்த பற்றாக்குறைகளின் ஒட்டுமொத்தம் ரூபா 1,020 மில்லியன் ஆகும். 2019 ஆம் ஆண்டு வரையில் இந்த மாநகர சபைகளுக்கிடையே 12 மாநகர சபைகளின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பற்றாக்குறை காண்பிக்கப்பட்டதுடன் அந்த மாநகர சபைகளின் ஒட்டுமொத்த பற்றாக்குறை ரூபா 2,186 மில்லியன் ஆகும். எனினும், 2020 ஆம் ஆண்டு வரையில் இந்த மாநகர சபைகளுக்கிடையே 02 மாநகர சபைகளின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பற்றாக்குறை காண்பிக்கப்பட்டதுடன் அதன் ஒட்டுமொத்த பற்றாக்குறை ரூபா 431 மில்லியன் ஆகும். இந்த பற்றாக்குறைகளை பகுப்பாய்வு செய்யும் போது தெளிவாக அடையாளமாக 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் முறையே கொழும்பு மாநகர சபையில் ரூபா 883 மில்லியன், ரூபா 1,195 மில்லியன் மற்றும் ரூபா 367 மில்லியன் பற்றாக்குறை காண்பிக்கப்படுகின்றது. இந்த மாநகர சபைகளுக்கிடையே 09 மாநகர சபைகள் 2018, 2019 மற்றும் 2020 ஆம் என்ற 03 ஆண்டுகளிலும் மிகையினை காண்பித்திருந்தது.

மாநகர சபைகளினால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 24 மாநகர சபைகளின் மொத்த சொத்துக்களின் அளவு 2018 ஆம் ஆண்டில் ரூபா 52,231 மில்லியன் தொகையும், 2019 ஆம் ஆண்டில் ரூபா 55,435 மில்லியன் தொகையும், 2020 ஆம் ஆண்டில் ரூபா 104,430 மில்லியன் தொகையினையும் பிரதிநிதித்துவப்படுத்தியது. இதன் பிரகாரம் 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2020 ஆம் ஆண்டு வரையில் இந்த மாநகர சபைகளின் மொத்த சொத்துக்களின் அதிகரிப்பு 100 சதவீதமாகும். 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2020 ஆம் ஆண்டு வரையில் ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே மாநகர சபையின் மொத்த சொத்துக்கள் ரூபா 41,026 மில்லியனால் அதிகரித்திருந்தது. அதற்குக் காரணம் 2020 ஆம் ஆண்டு முதல் மேல் மற்றும் வடமத்திய மாகாணங்களில் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் கணக்குகள் தயாரிக்கப்பட்டமையினால் சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்து கணக்கு வைத்தல் மற்றும் காணி, கட்டிடங்கள் கணக்கு வைக்கப்பட்டமையாகும்.

மாநகர சபைகளினால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 24 மாநகர சபைகளினதும் மொத்த பொறுப்புக்களின் அளவு 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 15,052 மில்லியன் தொகையும், ரூபா 19,196 மில்லியன் தொகையும், ரூபா 21,005 மில்லியன் தொகையுமாக இருந்தது. குருணாகல் மாநகர சபையின் மொத்த பொறுப்புக்களின் அளவு 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2020 ஆம் ஆண்டு வரையில் 336 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. இதற்கு காரணம் கடன் மூலதனம் 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2020 இன் போது ரூபா 695 மில்லியனால் அதிகரித்தமையாகும்.

2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 24 மாநகர சபைகளின் தேறிய சொத்துக்களின் அளவு ரூபா 92,030 மில்லியன் ஆகும். இதற்கிடையே, ஸ்ரீ ஜயவர்த்தனபுர மாநகர சபை ரூபா 41,736 மில்லியன் அதிகரித்தமை தேறிய சொத்துக்களின் அளவை பிரதிநிதித்துவப்படுத்தியதுடன் குறைந்த தேறிய சொத்துக்களின் அளவை பிரதிநித்துவப்படுத்துவது அம்பாந்தோட்டை மாநகர சபையாக இருந்ததுடன் அதன் அளவு ரூபா 139 மில்லியன் ஆகும்.

மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 219 ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சகல மாநகர சபைகளினாலும் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அந்த 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்குரிய நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு செய்யப்பட்டு கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) மற்றும் 11(2) இன் பிரகாரம் அபிப்பிராயத்தை உள்ளடக்கிய சுருக்க மற்றும் முகாமைத்துவ அறிக்கை யாவும் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டில் 22 மாநகர சபைகளுக்காக முனைப்பழியுள்ள அபிப்பிராயமும், அனுராதபுரம் மாநகர சபைக்காக மறுப்பு அபிப்பிராயம் மற்றும் கடுவெல மாநகர சபைக்காக பாதகமான

அபிப்பிராயமும் வெளியிடப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டில் 20 மாநகர சபைகளுக்காக முனைப்பழியுள்ள அபிப்பிராயமும், நீர்கொழும்பு, அனுராதபுரம், பொலன்னறுவை மற்றும் மட்டக்களப்பு மாநகர சபைகளுக்காக பாதகமான அபிப்பிராயமும் வெளியிடப்பட்டிருந்தது. 2020 ஆம் ஆண்டில் 23 மாநகர சபைகளுக்காக முனைப்பழியுள்ள அபிப்பிராயமும், மாத்தளை மாநகர சபைக்காக பாதகமான அபிப்பிராயமும் வெளியிடப்பட்டிருந்தது. ஒட்டுமொத்தமாக எடுக்கும் போது 2018 ஆம் ஆண்டில் மாநகர சபைகளுக்காக 92 சதவீத முனைப்பழியுள்ள அபிப்பிராயமும், 2019 ஆம் ஆண்டில் மாநகர சபைகளுக்காக 83 சதவீத முனைப்பழியுள்ள அபிப்பிராயமும், 2020 ஆம் ஆண்டில் மாநகர சபைகளுக்காக 96 சதவீத முனைப்பழியுள்ள அபிப்பிராயமும் வெளியிடப்பட்டிருந்தது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 14 ஆவது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் ஒவ்வொரு நிதியாண்டின் மூன்று வருட காலஎல்லை முடிவடைந்ததன் பின்னர் ஒன்பது மாதங்களுக்குள் சகல கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனங்களினதும் நிலைமை அறிக்கையொன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்களுக்கிடையே இனங்காணப்பட்ட பிரதான குறைபாடுகள், அதற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் மற்றும் கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனத்தினால் தடுப்பதற்கான நடவடிக்கைகளும் இடவேண்டியிருந்ததுடன் பாராளுமன்றத்திற்கு அந்த அறிக்கை கையளிக்கப்படும் வரையிலும் அது தொடர்பாக காணப்படுகின்ற நிலைமைகளும் குறிப்பிடப்படல் வேண்டும். மேற்குறிப்பிடப்பட்ட பிரகாரம் இதுவரை தீர்த்து வைக்கப்படாதுள்ள 24 மாநகர சபைகளின் கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

## 01. கண்டி மாநகர சபை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தில் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அது தொடர்பான தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| அ. | அனுமதியற்ற நிர்மாணங்களுக்காக அறவிட வேண்டிய ரூபா 80,583,133 தொகை உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தை நிறைவேற்றாமல் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | உடன்படிக்கையின் பிரகாரம் உரிய செயற்திட்டத்திற்காக நிதியம் பயன்படுத்தப்படல் வேண்டும். | போகம்புற காத்திருக்கும் பேருந்து நிலையத்திற்கு அருகில் காணப்படுகின்ற கடைகளை அகற்றி உரிய நியமங்களின் பிரகாரம் அமைப்பதற்கு நிதியம் பயன்படுத்தப்படும். | நிதியம் மேலும் செலவிடப்பட்டிருக்க வில்லை. |
| ஆ. | கட்டுகஸ்தோட்டை பொது மலசலகூடத்தின் வாடகையாளரினால் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்காக அறவிட வேண்டிய ரூபா 1,013,466 தொகையான நீர்க் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைப் பணத்தை அறவிடுதல் வேண்டும். | சபையின் அங்கீகாரத்திற்கு அனுப்பி தீர்மானம் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | அதனை அறவிடுவதற்கோ அல்லது ஏனைய வேறு நடவடிக்கைகளோ எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| இ. | குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர் ஒருவர் கல்விச் சான்றிதழை மோசடியாக சமர்ப்பித்தமை உறுதிப்படுத்தப்பட்டிருந்த போதும் அதற்காக முறையான நடவடிக்கைகள் பின்பற்றப்படாமல் மேற்கூறப்பட்ட | பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | உள்ளூராட்சி ஆணையாளரினால் ஆரம்ப விசாரணை நடாத்துவதற்கு உத்தியோகத்தர் நியமிக்கப்பட்ட போதும் மாநகர சபை மிகுதி நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. | விசாரணைகளை பூர்த்தி செய்து நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | உத்தியோகத்தர் குடும்ப சுகாதார சேவையின் II ஆம் வகுப்பிற்கு உயர்த்தப்பட்டு 2008 சனவரி 01 ஆந் திகதி முதல் 2017 யூலை 31 ஆந் திகதி வரை ரூபா 3,130,652 சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக மத்திய மாகாணத்தின் உள்ளூராட்சி ஆணையாளரினால் ஆரம்ப விசாரணைகளை மேற்கொள்வதற்கு நகர ஆணையாளருக்கு அனுப்பப்பட்டிருந்த போதும், இதுவரை ஆரம்ப விசாரணைகள் இடம்பெற்றிருக்கவில்லை. | | | |
| ஈ. | சபையின் ஆதவவரி, நானாவித வருமானம், நீர், களஞ்சியக் கணக்குகள் தயாரிப்பதற்குரிய கணனி மென்பொருட்களை வடிவமைப்பதற்கான கூறுவிலை மதிப்பீட்டு தொழில்நுட்ப அறிக்கையில் கையொப்பம் இடும்போது வெளிக்குழு அங்கத்தவருக்கு பேராதனை பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்தின் பீடாதிபதியின் கையொப்பம் போலியாக இடப்பட்டு ரூபா 8,659,200 பெறுமதியுடைய கணனி மென்பொருட்கள் தொடர்பாக பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | மோசடியாக கையொப்பம் இட்டமையை ஏற்றுக் கொள்வதுடன் ஆரம்ப விசாரணைகள், இரசாயன பகுப்பாய்வு அறிக்கைகள் தொடர்ந்தும் பரீட்சிக்கப்படுகின்றது. | குறைபாடுகள் தொடர்பாக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| உ. | கண்டி முதல் கட்டுகஸ்தோட்டை வரையான பிரதான நகரங்களுக்கு அடுத்தால் நீர்க் குழாய்களை பதிக்கும் வேலைகள் ரூபா 210,528,076 பெறுமதியில் 2016 ஆம் ஆண்டின் போது ஒப்பந்த நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் அதற்குரிய கணக்காய்வு பரிசோதனையின் போது உரிய ஒப்பந்தக் கம்பனிக்கு வழங்க வேண்டியதாக நீர் வேலை பொறியியலாளரின் முன்மொழிவு மற்றும் இறுதியில் ரூபா 210,528,076 தொகையில் உரிய ஒப்பந்தம் ஒப்பந்தக் கம்பனிக்கு செயற்திட்டம் வழங்கப்பட்டிருந்த மையினால் பெறுகை நடைமுறைகள் வெளிப்படையாக இன்றி அமுல்படுத்தப்பட்டிருந்தது. மேலும், பெறுகைகள் வழிகாட்டியின் 2.6.1(அ)(ii) இற்கு முரணாக ஒப்பந்தத்திற்குரிய மாதிரிகளை தயாரித்தல் மற்றும் பரிந்துரை செய்யப்பட்ட பிரதான நகர பொறியியலாளர் மற்றும் நீர் வேலை பொறியியலாளர் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவின் தலைவர் மற்றும் அங்கத்தவராக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | பெறுகை செயற்பாடுகள் பின்பற்றப்படல் வேண்டும். | நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை. நகர உத்தியோகத்தர் களுக்காக கையளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. | பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் தொடர்பாக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்க வில்லை. பிரதான பொறியியலாளர் ஓய்வு பெற்றுச் சென்றிருந்ததுடன் தற்போது ஓய்வூதியம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| ஊ. | கெப்பெற்றிபொல சந்தைத் தொகுதியில் கீழ் மாடியில் கடைகள் நீண்டகாலம் முதல் மூடப்பட்டிருந்ததுடன் 34 கடைகளில் இருந்து ரூபா 1,221,291 தொகையான கடை வாடகை 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் நிலுவையாக காணப்பட்டது. | நிலுவை பணத்தை அறவிடுவதற்கும், கடைகளை வாடகைக்கு வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | சந்தைத் தொகுதியை திருத்தியமைத்து வாடகையாளர்களுக்கு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | 16 கடைகளின் சிட்டையிடல்கள் நிறுத்தப்பட்டுள்ளது. நிலுவைகள் அறவிடப்படவில்லை. |
| எ. | உபாய வழி நகர அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் குட்செட் சந்தைத் தொகுதியின் உரிமையாளர் களுக்கு இழப்பீட்டு உரித்தை கையளிக்கும் போது சபைக்கு பெற வேண்டிய ரூபா 4,235,468 தொகையான வாடகை அறவிடப்படாமல் இழப்பீட்டு உரித்து செலுத்தி முடிவுறுத்தப்பட்டிருந்தது. | இழப்பீட்டை செலுத்துதல் சரியான முறைமையின் பிரகாரம் மேற்கொள்ளப்படல் வேண்டும். | கலந்துரையாடி தீர்மானமொன்றை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | குறைபாடுகள் சரி செய்யப்பட்டிருக்க வில்லை. |
| ஏ. | சபையினால் நீர் வழங்கப்பட்டிருந்த நுகர்வோர்களுக்கு 2015 ஆம் ஆண்டின் போது நீர் மானிகளுக்கு ஏற்பட்டிருந்த இழப்பீடுகளுக்காக மானிகளின் நட்டமாக ரூபா 58,880 அளவில் அறவிடப்பட்டிருந்த போதிலும் நீர்மானி பழுதடைந்தமையினால் குறைவாக காட்டிய நீர் நுகர்வுகளிடம் அறவிட | நட்டம் அறவிடப்படல் வேண்டும். | மானி பழுதடைந்தமையினால் குறைவாக காண்பிக்கப்பட்ட நுகர்வு கணிப்பிடப்படல் வேண்டும். | குறைபாடுகள் தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வேண்டிய ரூபா 2,495,723 தொகை அறவிடப்பட்டிருக்க வில்லை. | | | |
| ஐ. | தரச்சான்றிதழ் பெற்றுக் கொள்ளப்படாமல் குடியிருந்தமையின் அடிப்படையில் 10 வியாபார அலகுகளிலிருந்து 2018 ஆம் ஆண்டு முதல் அறவிடப்பட வேண்டிய ரூபா 1,878,500 தொகையான தண்டப் பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | மாநகர சபைக் கட்டளைச்சட்டத்தின் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஆலோசனை கோரி உள்ளூராட்சி ஆணையாளருக்கு கடிதம் அனுப்புதல். | அறவிடப்பட்டிருக்க வில்லை. |
| ஒ. | அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்ளப்படாமல் நித்தவெல விளையாட்டு அரங்கில் ரூபா 2,567,440 கட்டணம் அறவிட வேண்டிய 43 அறிவித்தல் பதாதைகள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. | உப விதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | மீண்டும் களப் பரிசோதனையொன்றை மேற்கொண்டு உப விதிகளுக்கு இணங்க கண்டறிந்து சட்டரீதியாக வழக்கு தொடருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | குறைபாடுகள் சரி செய்யப்பட்டிருக்க வில்லை. |
| ஓ. | 2019 ஆம் ஆண்டு முதல் சந்தைகளை வாடகைக்கு வழங்குவதன் மூலம் மற்றும் கடைகளுக்கான கேள்வி கட்டணமாக அறவிட வேண்டிய ரூபா 70,029,564 தொகையும், மெனிக்கும்புற சந்தைத் தொகுதியின் கடைகளுக்காக பெற வேண்டிய ரூபா 21,768,049 தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவிட வேண்டிய வருமானங்களை சேகரித்தல் வேண்டும். | இதற்காக விரைவாக பதிலை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அறவிடப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| ஔ | பேராதனை விருந்தினர் விடுதியை வாடகைக்கு வழங்கியதற்காக நகர அபிவிருத்தி சபையிலிருந்து மாநகர சபைக்கு அறவிட வேண்டிய கூட்டுமொத்தமான ரூபா 8,132,601 வாடகைப் பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவிட வேண்டிய வருமானம் சேகரிக்கப்படல் வேண்டும். | லங்கா றெஸ் ஹவுஸ் லிமிட்டட்டிற்கு விநியோகிக்கப்பட்டுள்ள கடிதத்தின் பிரகாரம் கட்டணம் 70 சதவீதம் முதல் 65 சதவீதம் வரை குறைக்கப்பட்டுள்ளது. | அறவிடப்பட்டிருக்க வில்லை. |
| க. | அறவிடப்படாமல் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தை விஞ்சியிருந்த அறிவித்தல் பதாதை கட்டணம் மற்றும் விபத்திற்குட்பட்ட வாகனங்களுக்குரியதாக பெறவேண்டிய ரூபா 13,306,602 என்பவற்றை அறவிடுவதற்கும், 01 வருடம் முதல் 05 வருடங்களுக்கு இடையிலான காலவீச்சை கடந்திருந்த ரூபா 109,495,156 வாடகை மற்றும் மோட்டார் வாகன கட்டணங்களை அறவிடுவதற்கு போதியளவான பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பெற வேண்டிய மீதிகள் அறவிடப்படல் வேண்டும். | இதற்காக விரைவாக பதில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அறவிடுவதற்கான நடவடிக்கையோ அல்லது சட்ட ரீதியான நடவடிக்கையோ எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| கா. | முறையான கேள்வி நடைமுறைகள் மற்றும் சட்டரீதியான உடன்படிக்கை இன்றி 2007 ஆம் ஆண்டு முதல் வெளித்தரப்பினரால் உரிமை கோரப்பட்ட தலதா வீதியில் இலக்கம் 74 என்ற | சட்டரீதியான முறைமையின் பிரகாரம் ஆதனங்களை வாடகைக்கு வழங்குதல் வேண்டும். | உரிய பணத்தை அறவிடல் மற்றும் உரித்தை கையேற்பதற்காக தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. | பணத்தை அறவிடுவதற்கோ அல்லது உரித்தை கையேற்றலோ மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |

இடத்தில் அமைந்துள்ள நகர காணியை அபிவிருத்தி செய்யப்படாத மதிப்பீட்டு பெறுமதி ரூபா 55,000,000 ஆக 2015 ஆகஸ்ட் மாதம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதும் எந்தவொரு பணத்தையும் அறவிடுவதற்கோ அல்லது உரித்தை கையேற்பதற்கோ அல்லது சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கோ சபையினால் போதியளவான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 02. நுவரெலியா மாநகர சபை

--------------------------------------------

| | | | | |
|---|---|---|---|---|
| அ. | கிறைகரி குளத்தின் படகுச் சேவை ஆரம்பித்தது முதல் 2021 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையான காலத்தில் 40 படகு உரிமையாளர்களிடமிருந்து ரூபா 15,987,248 தொகை அறவிட வேண்டியிருந்தது. | தாமதமின்றி நிலுவை வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நிலுவைப் பணத்தை செலுத்தி தீர்க்கும் வரை படகு ஓட்டம் நிறுத்தப்பட்டுள்ளது. | 2021.07.31 ஆந் திகதியில் காணப்பட்ட நிலுவைப் பணம் ரூபா 18,046,915.00 ஆகும். உரிய நிலுவைப் பணத்தில் முதலாவதாக 25 சதவீதம் செலுத்தியதன் பின்னர் மாத்திரம் படகை ஓட்டத்தில் விடுவதற்கு அனுமதி வழங்குமாறு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டிருந்த துடன் மிகுதிப் பணம் 2022.03.31 ஆந் திகதிக்கு முன்னர் செலுத்தப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| ஆ. | பிரதான மதிப்பீட்டாளரின் 2003 பெப்ரவரி 27 ஆந் திகதிய மதிப்பீடு மற்றும் மத்திய மாகாண மதிப்பீட்டாளரின் 2019 ஆகஸ்ட் 21 ஆந் திகதிய கடை வாடகை மதிப்பீடு தொடர்பாக கடை வாடகை உரிமையாளர்களினதும் நகர உறுப்பினர்களினதும் எதிர்ப்பின் காரணமாக புதிய மதிப்பீட்டு வாடகை அறவிடப்படாமையினால் 2003 ஆம் ஆண்டு முதல் மாநகர சபைக்கு இதுவரை உரித்தற்றிருந்த ஒட்டுமொத்த வருமானம் ரூபா 254,786,700 ஆகும். | சபை நிதியத்திற்கு நட்டமொன்று ஏற்படாத வகையில் தீர்மானம் எடுக்கப்படல் வேண்டும். | ஏற்பட்டிருந்த எதிர்ப்பின் காரணமாக இவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | 2009 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டை அமுல்படுத்துவதற்காக சபைக்கு அனுப்பப்பட்டு அந்த தீர்மானத்தின் முன்னாள் அமுல்படுத்தப்பட்ட மதிப்பீட்டில் 25 சதவீதம் அதிகரிக்கப்பட்டு அறவிடப்படுவதாகும். அதன் பிரகாரம் இதுவரை கடை வாடகை அறவிடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |
| இ. | மாநகர சபைகள் மற்றும் கடை உரிமையாளர்களுக்கு இடையே கையொப்பமிடப்பட்ட உடன்படிக்கையின் II(2) இணக்கப்பாட்டின் பிரகாரம் கடை உப வாடகைக்கு வழங்க முடியாதிருந்த போதிலும் 90 கடைகள் உப வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. உள்ளூராட்சி ஆணையாளரின் 2016 ஆகஸ்ட் 15 ஆந் திகதிய 2016/03 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் கடைகள் உப வாடகைக்கு | உப வாடகையாளர்களுக்கு உரித்தை கையளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எதிர்காலத்தில் உள்ளூராட்சி ஆணையாளரின் ஆலோசனையின் பிரகாரம் செயற்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 2016/03 சுற்றறிக்கையின் பிரகாரம் கடைகளின் பெயரை மாற்றுவதற்கு தேவையான அங்கீகாரம் சபைக்கு அனுப்பப்பட்டு அதற்காக இதுவரையிலும் மிகுதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வழங்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் 120 மாதங்களில் வாடகை பெறப்பட்டு உப வாடகையாளருக்கு உரித்து கையளிப்பதற்கு அனுமதி வழங்கியிருந்த போதிலும், உப வாடகைக்கு வழங்கியிருந்த எந்தவொரு கடையின் உரித்தும் மாற்றுவதற்கு 2021 ஏப்ரல் 28 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| ஈ. | ஒரு ஏக்கர் அளவு பரப்பளவினையுடைய பம்பரகலே, கற்குழி காணி மற்றும் 2008 திசெம்பர் 24 ஆந் திகதி வருடமொன்றிற்கு ரூபா 26,500 தொகையில் வியாபாரி ஒருவருக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. வாடகை உடன்படிக்கையின் இரண்டாவது உப பிரிவின் பிரகாரம் உடன்படிக்கை காலம் 2012 திசெம்பர் 24 ஆந் திகதியில் முடிவுறுத்தப் பட வேண்டிய போதிலும் காணி மற்றும் கற்குழிகள் 2020 முடிவடையும் வரையிலும் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபை நிதியத்திற்கு ஏற்படாத வகையில் தீர்மானம் எடுக்கப்படல் வேண்டும். | கோவைகள் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவிற்கு எடுத்துச் செல்லப்பட்டு பரிசோதனைகள் நடாத்தப்படுகின்றது. | பம்பரகலே கற்குழிகளை மீண்டும் நகர சபைக்கு கையேற்பதற்கு ஆரம்பமாக எல்லையினை தீர்மானிப்பதற்கு தேவையாக இருந்தமையினால் நுவரெலியா பிரதேச செயலகம் மூலம் அளவிடல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக கோரிக்கை விடப்பட்டுள்ளது. |

**03. மாத்தளை மாநகர சபை**

-----------------------------------------

| | | | | |
|---|---|---|---|---|
| அ. | காணி மற்றும் கட்டிட ஆய்வு அறிக்கையின் பிரகாரம் சபைக்கு அறவிட வேண்டிய ரூபா 2,600,000 பெறுமதியான 02 காணிகள் வெளிநபரினால் அனுமதியற்ற வகையில் கட்டங்கள் அமைத்து குடியிருந்து வருகின்ற போதிலும் அது தொடர்பாக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முறையான நடவடிக்கைகள் பின்பற்றப்படல் வேண்டும். | தடுப்பதற்கான வழிமுறைகள் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. | நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை. |
| ஆ. | நாகொல்லயில் அமைந்துள்ள 01 றூட் 25.7 பேர்ச் நிலப்பகுதி உடன்படிக்கையின் அடிப்படையில் 12 நபர்களுக்கு 1988 ஆம் ஆண்டின் போது நீண்டகால வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் வாடகையாளர்களினால் அனுமதியற்ற நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்த கடைகளுக்காக ரூபா 31,280,000 வாடகை பணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சட்டரீதியான நடவடிக்கைகளை எடுத்து உரிய பிரச்சினைகளை தீர்த்து வைத்தல் வேண்டும். | 12 கடை உரிமையாளர்களுக்கு இடையே சட்டரீதியாக வாடகைக்கு வழங்குவதற்காக உள்ளூராட்சி ஆணையாளருக்கு கடிதம் அனுப்பப்பட்டதன் பின்னர் அதில் வழங்கப்பட்ட நபர்கள் தொடர்பாக ஏற்பட்டிருந்த பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கு நகர சட்டத்தரணிக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதன்போது உரிய அறிக்கை கிடைத்ததன் பின்னர் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 40(i)(ஊ) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | அனுமதியற்ற நிர்மாணங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படாமல் நிலுவை வாடகை அறவிடப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| இ. | தனியார் ஒப்பந்தகாரருக்கு தமது செயற்திட்ட தளத்தை நடாத்திச் செல்வதற்காக 2018 ஆம் ஆண்டின் போது மாநகர சபைக்கு சொந்தமான ஒரு ஏக்கர் பரப்பளரையுடைய பாராவத்த காணியில் மேற்கொள்ளப்பட்ட நிர்மாணங்கள் தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அனுமதியற்ற நிர்மாணங்கள் தொடர்பாக தேவையான சட்டரீதியான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். | இந்தக் காணி தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும். | சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| ஈ. | மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அத்தியாயம்) 179(அ)(ஆ) பிரிவுகளுக்கு முரணாக நடவடிக்கை எடுத்து மாத்தளை நகரத்தில் நவீன சந்தைத் தொகுதியில் இலக்கம் 60 என்ற கடையின் வாடகையாளராக 2012 திசெம்பர் 31 ஆந் திகதி உடன்படிக்கை செய்திருந்தவர் 2018 மார்ச் 09 ஆந் திகதி இலக்கம் 2061/42-05 என்ற அதிவிசேட வர்த்தமானியின் மூலம் மாத்தளை நகர சபையின் உறுப்பினராக நியமிக்கப்பட்டிருந்தார். அவ்வாறே அந்தக் கடைக்காக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ரூபா 1,296,456 முற்செலுத்தும் பணம் மற்றும் ரூபா 3,488,945 தொகையான தண்டப்பணத்தையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் மற்றும் நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | சுற்றறிக்கையின் பிரகாரம் சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | உரிய உறுப்பினர் தொடர்பாக நடவடிக்கை எடுத்தலோ அல்லது உரிய பணத்தை அறவிடுதலோ மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |
| உ. | ஆதன வரி அலகின் மொத்த நிலுவைப் பணம் ரூபா 15,000 தொகையை விஞ்சிய | நிலுவை ஆதன வரியை அறவிடுவதற்கு | எதிர்காலத்தில் நிலுவை வருமானத்தை அறவிடுவதற்காக | மேலும் அறவிட வேண்டியதாக காணப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | தனியார் ஆதனங்களிலிருந்து ரூபா 6,695,597 நிலுவை ஆதனவரி மற்றும் அரசாங்க நிறுவனங்களிலிருந்து ரூபா 3,837,103 நிலுவை ஆதனவரி மீதி என்பன 2021 ஆம் ஆண்டு நவம்பர் 12 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிடப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுப்பதுடன் தேவையான சட்டரீதியான நடவடிக்கைகள் பின்பற்றப்படல் வேண்டும். | விரைவாக தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு உரிய உத்தியோகத்தர் களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | |
| ஊ. | 2009 ஆம் ஆண்டில் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்த 14 கடைகளின் கூட்டுமொத்தமாக ரூபா 3,389,297 முற்செலுத்தும் பணம் மற்றும் அதற்குரியதாக கணிப்பீடு செய்யப்பட்ட கூட்டுமொத்தமாக ரூபா 22,880,827 தொகையான தண்டப் பணம் என்பவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பெறவேண்டிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்களை தவிர்த்துக் கொள்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | பணம் எதுவும் அறவிடப்பட்டிருக்க வில்லை. |
| எ. | அம்பகஹமூல பேரூந்து தரிப்பிட நிலையத்தின் கீழ் மாடி மற்றும் முதலாவது மாடியில் அமைந்துள்ள 29 கடைகளில் 22 கடைகள் 18 வருட காலம் முதல் மூடப்பட்டு செயற்பாடற்று அழிவடைவதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டிருக்கும் போதும், தேவையினை குறிப்பாக இனங்காணாமையினாலும் மற்றும் சாத்தியவள | செயற்திட்டத்தை அமுல்படுத்தும் போது சரியான சாத்தியவள ஆய்வின் பின்னர் சரியான பிரகாரம் திட்டமிடப்பட்டு தேவையினை கவனத்தில் கொண்டு தேவையான நிர்மாணங்கள், அந்த தொழில்நுட்ப வடிவமைப்பாளர் | எதிர்காலத்தில் இவ்வாறான செயற்திட்டங்கள் தொடர்பாக கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய சரிசெய்தல்கள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| ஆய்வின்றியும் ரூபா 10,794,600 செலவில் இரண்டாவது மாடியும் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. முதலாவது மாடியின் சுவர் மற்றும் பக்க சுவர்கள் (Beam) வெடித்து உடைந்த கட்டிடம் விழும் நிலையில் காணப்பட்ட போது அதன் அடிப்படையில் இரண்டாவது மாடிக் கட்டிடம் திட்டமிடல் குழுவினால் அங்கீகரிக்கப்படாமல் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே, நிர்மாணிக்கப்பட்ட இரண்டாவது மாடியின் கட்டிடத்தில் கூரையும் சரியான நியமத்தில் நிர்மாணிக்கப்பட்டிருக்க வில்லை. | களின் திட்ட முறைமையின் பிரகாரம் மேற்கொள்ளப்படல் வேண்டும். | | |

## 04. தம்புள்ள மாநகர சபை

---------------------------------------

| | | | |
|---|---|---|---|
| தித்தவெல்கொல்ல பிரதேசத்தில் ரூபா 1,000,000 அளவிலான பெறுமதியில் சிகிச்சை நிலையமொன்று மற்றும் உடற்பயிற்சி நிலையமொன்று நிர்மாணிக்கப்பட்டு ரூபா 1,000,000 பெறுமதியான உடற்பயிற்சி உபகரணங்களும் பொருத்தப்பட்டிருந்த போதிலும் 2015 ஆம் ஆண்டு முதல் பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த சொத்துக்கள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படல் வேண்டும். | எதிர்காலத்தில் இந்த நிலையத்தை பயன்பாட்டிற்கு எடுக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | குறைபாடுகள் சரி செய்யப்பட்டிருக்க வில்லை. |

**05. மாத்தறை மாநகர சபை**

-----------------------------------------

| | | | | |
|---|---|---|---|---|
| அ. | உள்ளூராட்சி ஆணையாளரின் 1984 நவம்பர் 20 ஆந் திகதிய 1984/19 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 8.1 ஆம் பிரிவின் பிரகாரம் பிழையாக அர்த்தப்படுத்தப்பட்டு முத்திரை கட்டண வருமானத்தை சேகரிப்பதற்காக மாநகர சபையின் 11 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 1,365,965 தரகு பணம் செலுத்தப்பட்டிருந்தது. | தீர்க்கப்படாதுள்ள கணக்காய்வு பந்திகள் தொடர்பாக சபை செலுத்துதல் வேண்டும். | இந்த கணக்காய்வு ஐயவினா பெறப்பட்டதன் பின்னர் வெளிமாகாணங்க ளிலிருந்து கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணத்தை சேகரிப்பதற்காக எந்தவொரு உத்தியோகத்தரையும் ஈடுபடுத்துவதற்கோ அல்லது அவர்களுக்காக தரகுப் பணத்தை செலுத்துவதற்கோ நடவடிக்கை எடுக்காமையால் வெளி மாகாணங்களிலிருந்து கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணத்தின் அளவு தொடர்பாக எந்தவொரு தொகையும் கிடைக்காதிருந்ததுடன் அதன் மூலம் சபைக்கு ஏற்பட்ட நிதி ரீதியான நட்டத்தை மதிப்பீடு செய்ய முடியாதுள்ளது. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| ஆ. | நடைபாதை மற்றும் பொது இடங்களில் நெரிசல் ஏற்படும் வகையில் நிர்மாணிக்கப்பட்டிருந்த அனுமதியற்ற 11 விற்பனை கடைகள் தொடர்பாக சபை சட்டரீதியான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அனுமதியற்ற வியாபார நிலையங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நகர பொறியியலாளரின் ஆலோசனையை விசாரித்து அகற்றுவதற்கு முன்மொழியப் பட்டுள்ளது. | அனுமதியற்ற வியாபாரங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| இ. | சபைக்குச் சொந்தமான 40.91 பேர்ச் அளவையுடைய 03 காணிகள் சபையின் அங்கீகாரமின்றி தனியார் தரப்பினரால் பயன்படுத்தப்படுகின்றது. | சட்டரீதியான நடவடிக்கைகள் விரைவாக எடுக்கப்படல் வேண்டும். | தென் மாகாண நிதி விதி 561 இன் பிரகாரம் காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக வருடாந்த மெய்மையாய்வினை மேற்கொள்வதற்காக 2020 யூன் 22 ஆந் திகதிய 2020/மாநச/நிதி பிர நிதி 06 மற்றும் கொள்கை தயாரித்தல் தொடர்பான நிலையியல் குழு பரிந்துரையின் பிரகாரம் குழுவொன்றை நியமிப்பதற்கு 2020 யூலை 09 ஆந் திகதிய 223 உ.3 ஆம் இலக்கத்தின் மூலம் மாநகர சபை அங்கீகரித்திருந்ததுடன் அதன் பிரகாரம் மிகுதி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும். | சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 06. காலி மாநகர சபை

---------------------------------

| | | | |
|---|---|---|---|
| 2003 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற ரூபா 111,553 தொகையான தொங்கல் கணக்கு மீதி தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | தொங்கல் கணக்கு மீதி தீர்த்து வைக்கப்படல் வேண்டும். | தொங்கல் கணக்கின் மீதியை பதிவழிப்பதற்கு ஆளுனருக்கு விண்ணப்பிக்கப் பட்டுள்ளது. | இந்த மீதியை பதிவழிப்பதற்காக கௌரவ ஆளுனருக்கும் உள்ளூராட்சி ஆணையாளருக்கும் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப் பட்டுள்ளது. |

## 07. அம்பாந்தோட்டை மாநகர சபை

| | | | | |
|---|---|---|---|---|
| அ. | 2010 திசெம்பர் 27 ஆந் திகதிய தபபா/தபாகொ/2010/01 ஆம் இலக்க தென்மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் 02 மற்றும் 03 ஆம் பந்திகளின் பிரகாரம் கடைகளின் வாடகையை மதிப்பிட்டு சபை அங்கீகரித்திருந்த போதிலும் சபைக்குச் சொந்தமான 50 கடைகளுக்கும், 10 காணிகளுக்கும் உரியதாக பழைய வாடகை அறவிடப்பட்டமையினால் 2016 ஆம் ஆண்டின் சனவரி மாதம் முதல் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை சபை நிதியத்திற்கு ஏற்பட்டிருந்த நட்டம் ரூபா 11,268,359 ஆகும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | சகல வாடகையாளர் களுக்கும் கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ள துடன் வாடகையாளருடன் உடன்படிக்கைக்கு இணங்கியிருக்கவில்லை | மீண்டும் சகல வாடகையாளர் களுக்கும் 2021 பெப்ரவரி 21 ஆந் திகதி எழுத்து மூலம் அறிவிக்கப்பட்ட போதிலும் பதில் இதுவரை வழங்கப்பட்டிருக்க வில்லை. |
| ஆ. | சபையின் கழிவுப் பொருள் நிலையத்தின் ரூபா 300 மில்லியன் செலவில் 2020 யூன் 25 ஆந் திகதி அமுல்படுத்தப்பட்ட கவசிமா செயற்திட்டத்தின் மூலம் சேதனப் பசளை உற்பத்தி செய்வதற்கு நாளொன்றுக்கு 30 தொன்னுக்கும் 50 தொன்னுக்கும் இடையிலான அளவு தேவையாக இருந்த போதிலும் சபை அதிகார | சாத்தியவள ஆய்வின் பின்னர் செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கும் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கான திட்ட முறைமையும் தயாரித்தல் வேண்டும். | அம்பாந்தோட்டை நகரத்தை கேந்திரமாக கொண்டு அமுல்படுத்துவதற்கு உத்தேசிக்கப் பட்டிருந்த அபிவிருத்தி செயற்திட்டங்களுக்கு இணையாக இந்த செயற்திட்டம் முன்மொழியப்பட்டிருந்த துடன் அதன் அபிவிருத்தி | அம்பாந்தோட்டை நகரத்தை கேந்திரமாகக் கொண்டு அமுல்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட அபிவிருத்தி திட்டம் இடைநடுவில் நிறுத்தியதுடன் எதிர்பார்க்கப்பட்ட கழிவுப் பொருளின் அளவு கிடைக்கப் |

| | | | |
|---|---|---|---|
| பிரதேசத்தில் நாளாந்தம் சேகரிக்கப்படுகின்ற உக்கும் கழிவுகளின் அளவு 01 தொன் இற்கும் 1.5 தொன் இற்கும் இடையில் இருந்தமையினால் நாளாந்த கழிவுப் பொருட்களின் தேவையை சேகரிப்பதற்கு சபை தவறியிருந்ததுடன் அதனை சேகரிப்பதற்கான திட்டமுறைமையொன்றும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | | செயற்திட்டம் இடைநடுவே நிறுத்தப்பட்டமையினால் எதிர்பார்க்கப்பட்ட கழிவுப் பொருள் அளவினை சேகரிப்பதற்கு வசதியீனமாக இருந்ததுடன் சபைக்கு அண்மையில் அமைந்துள்ள 04 பிரதேச சபைகள் இந்த செயற்திட்டத்திற்காக கழிவுப் பொருட்களை வழங்குவதற்கு முடியாதிருந்ததாக எழுத்து மூலம் அறிவித்திருந்தது. | பெறவில்லை. |

## 08. பண்டாரவளை மாநகர சபை

| | | | |
|---|---|---|---|
| 1987 ஆம் ஆண்டு முதல் மாநகர சபைக்குரிய கோப்பியாவத்த காணி நீண்டகால வாடகை அடிப்படையில் 24 நபர்களுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்காக அறவிட வேண்டிய ரூபா 4,881,060 நிலுவை வாடகைப் பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | சகல நிலுவைப் பணத்தையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தற்போது இந்த பணத்தை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | வாடகைப் பணம் மாதாந்தம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்பட்ட போதிலும் இதுவரையிலும் எந்தவொரு தொகையும் அவர்களினால் செலுத்தப்பட்டிருக்க வில்லை. உரிய காலத்தில் அந்த வாடகைப் பணத்தை செலுத்துவதற்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | அவர்களினால் நடவடிக்கை எடுக்காதிருக்குமாயின் சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

**09. பதுளை மாநகர சபை**

-------------------------------------

| | | | | |
|---|---|---|---|---|
| அ. | உள்ளுராட்சி ஆணையாளரின் 1980 திசெம்பர் 31 ஆந் திகதிய 1980/46 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் 252 கடைகளுக்காக புதிய மதிப்பீட்டு பெறுமதியின் அடிப்படையில் வாடகை அறவிடுவதற்கு பதிலாக 2002 ஆம் ஆண்டின் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு வாடகை அறவிடப்பட்டமையினால் 2019 யூலை 31 இல் உள்ளவாறு ரூபா 53,265,050 வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் ஆலோசனையின் பிரகாரம் புதிய மதிப்பீட்டு பெறுமதியின் அடிப்படையில் வாடகை அறவிடப்படல் வேண்டும். | புதிய வாடகையை அறவிடுவதற்காக ஒவ்வொரு இடத்தின் பிரகாரம் ஏதாவது ஒரு அளவை அறவிடுவதற்கு சபை அங்கீகாரம் கிடைத்திருந்தது. அந்த அறவிடல்களும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதுடன் மீண்டும் சபைத் தீர்மானத்தின் அடிப்படையில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 2015 இன் மதிப்பீட்டின் அடிப்படையில் 2021 சனவரி முதல் கடை வாடகை அறவிடுவதற்கு வாடகையாளர் களுக்கு அறிவிக்கப்பட்ட போதிலும் அவர்கள் வாடகைப் பணத்தை செலுத்துவதை நிராகரித்து முறையீடு ஒன்றை சமர்ப்பித்திருந்ததுடன் ஆளுனரின் ஆலோசனையின் பிரகாரம் மீண்டும் வாடகைப் பணத்தை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| ஆ. | பதுளை நகரத்தில் நடாத்திச் செல்லப்படுகின்ற இரண்டு சினிமா மண்டபங்களிலிருந்து | நிலுவை வாடகைப் பணம் விரைவாக அறவிடப்படல் | களியாட்ட வரிப் பணம் செலுத்துமாறு முகாமையாளர்களுக்கு | வழக்குத் தொடரப்பட்டுள்ள துடன் 2015 ஆம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | 2012 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை அறவிட வேண்டிய ரூபா 1,756,005 நிலுவை வாடகைப் பணம் அறவிடப்பட்டிருக்க வில்லை. | வேண்டும். | அறிவிக்கப்பட்ட போதிலும் செலுத்தப்பட்டிருக்க வில்லை. விற்கப்படாத பற்றுச்சீட்டு புத்தகங்கள் சபை பொறுப்பில் எடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறான சந்தர்ப்பத்தில் நிலுவைப் பணத்தை செலுத்துவதற்கு உத்தரவாதம் அளித்து தற்காலிக உடன்படிக்கையிலும் கைச்சாத்திடப் பட்டிருந்தது. அதன் போது இரண்டு வியாபாரிகள் மாத்திரம் செலுத்தி எஞ்சியவர்கள் செலுத்தியிருக்க வில்லை. | ஆண்டிற்காக m88/21- m96/21 வரை மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. |

## 10. அநுராதபுர மாநகர சபை

------------------------------------------

| | | | | |
|---|---|---|---|---|
| அ. | அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.9.1 ஆம் பந்தியின் பிரகாரம் சந்தை விலை ஒப்பீட்டு முறைமையின் கீழ் கூறுவிலை கோரும் போது மேற்கொள்வதற்கு உரிய சேகரிக்கப்பட்ட பெறுகை குழுக்களில் 40 அங்கத்தவர்களுக்கு ரூபா 662,644 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் உரித்தின்றி வழங்கப்பட்டுள்ள படிகள் உரிய உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிடப்படல் வேண்டும். | அனுராதபுரம் மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 229 ஆம் பிரிவின் கீழ் கேள்வி தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | அறவிடப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| ஆ. | நிரற்படுத்தப்பட்ட அரசாங்கத்தின் வீடொன்றில் குடியிருக்கும் போது திருமணம் முடித்த உத்தியோகத்தரின் சம்பளத்தில் பத்து (10%) சதவீதம் அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் முன்னாள் நகர ஆணையாளரிடமிருந்து 2009 நவம்பர் முதல் 2016 யூன் வரை ரூபா 201,017 மற்றும் 2020 சனவரி 01 முதல் திசெம்பர் 31 வரையான காலத்தில் அறவிட வேண்டிய ரூபா 99,662 வீட்டு வாடகை அறவிடப்படாதிருந்ததுடன் அங்கீகாரமின்றிய காலத்திற்கான தண்டப்பண வாடகை ரூபா 273,949 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே இந்த உத்தியோகத்தர் தொடர்பாக 1969 இன் 07 ஆம் இலக்க அரசாங்கத்தின் வீடுகள் (உரித்தை மீளப்பெறுதல்) சட்டத்தின் கீழ் நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தாபன விதிக் கோவையின் பிரகாரம் செயற்படுதல் வேண்டும். | 2009 ஒக்தோபர் 13 ஆந் திகதி நடைபெற்ற பொதுச்சபையின் தீர்மான இலக்கம் 44 முன்மொழிவு இலக்கம் 05(48) இன் கீழ் நகர ஆணையாளருக்கு வாடகை செலுத்தாமல் உத்தியோகபூர்வ வீட்டில் குடியிருப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டு தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. | முன்னாள் நகர ஆணையாளர் 2016 யூன் மாதம் முதல் மாநகர சபையிலிருந்து இடமாற்றலாகிச் சென்ற போது தற்போதைய நகர ஆணையாளருக்கு உத்தியோகபூர்வ இல்லம் கையளிக்கப்படாமல் அவர் வீட்டில் குடியிருந்து வருகின்றார். முன்னாள் நகர ஆணையாளர் உத்தியோகபூர்வ இல்லத்தில் ஒரு காலத்தில் குடியிருந்த காலத்திற்காக வீட்டு வாடகையும் முறையான அங்கீகாரமின்றிய காலத்திற்காக (2018 ஏப்ரல் 01 முதல் 2020 திசெம்பர் 31 வரை) தண்டப்பண வாடகையும் செலுத்தியிருக்க வில்லை. |
| இ. | 2018 ஆகஸ்ட் 29 ஆந் திகதிய 2086/15 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் | வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் மேலதிக கொடுப்பனவுகள் | சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் செலுத்தப்பட்டள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | மாநகர சபை அதிகாரத்தின் கீழ் இந்த படிகள் செலுத்தப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் நகர பிதாவின் பதவிணயினரின் பிரத்தியேக செயலாளர் மற்றும் பொதுசன உத்தியோகத்தர் இருவருக்கு ரூபா 25,000 உச்ச அளவின் கீழ் படிகள் செலுத்த முடியுமாக இருந்த போதிலும் 2018 ஆகஸ்ட் முதல் 2019 திசெம்பர் வரை ரூபா 35,000 வீதம் மாதாந்தம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. மேலும், அந்த வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் சட்ட ரீதியான ஏற்பாடு காணப்படாதிருக்கும் போது பிரத்தியேக செயலாளருக்கு 2019 ஏப்ரல் முதல் மாதமொன்றிற்கு ரூபா 5,000 வீதம் தொலைபேசிப் படியும் செலுத்தப்பட்டிருந்தது. | அறவிடப்படல் வேண்டும். | | ஆளுனரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்க வில்லை. |
| ஈ. | உள்ளூராட்சி நிறுவனங்களில் சேவையாற்றுகின்ற தீவு முழுவதற்குமான சேவைகளின் உத்தியோகத்தர்களுக்கும் மாகாண அரச சேவையின் உத்தியோகத்தர்களுக்கும் சம்பளம் மற்றும் படிகள் செலுத்துவதற்கு மாநகர சபைகள் கட்டளைச் சட்டம் (252 ஆம் அத்தியாயம்) 188(அ) முதல் (கொ) வரையான பிரிவுகளில் அதிகாரம் | படிகளைச் செலுத்துவதற்காக முறையான அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். | சபை அங்கீகாரத்தின் கீழ் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் கௌரவ ஆளுனரின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | ஆளுனரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வழங்கப்படாதிருக்கும் போது மற்றும் விடயப்பொறுப்பு அமைச்சரினதோ அல்லது ஆளுனரினதோ முன் அங்கீகாரமின்றி 32 உத்தியோகத்தர்களுக்கு 2018 ஆம் ஆண்டிற்காக ஊக்குவிப்பு படியாக ரூபா 3,496,082 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | | | |
| உ. | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 96,822,402 தொகையான நிலுவை ஆதனவரியை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆதனவரி நிலுவை வருடாந்தம் அதிகரிக்கின்ற மையால் நிலுவைப் பணத்தை அறவிடுவதற்காக விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எதிர்காலத்தில் ஆதனவரியை சேகரிக்கும் சதவீதத்தை அதிகரித்துக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவை ஆதனவரியை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றது. |
| ஊ. | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 45,698,842 தொகையான நிலுவை கடை வாடகையை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைக் கடை வாடகையை அறவிடுவதற்காக சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு கவனம் செலுத்துதல் வேண்டும். | நிலுவை வாடகையை அறவிடுவதற்கு முறையான பிரகாரம் கடிதம் விநியேகிக்கப் பட்டுள்ளதுடன் கடை உரிமையாளர்களின் கோரிக்கைக்காக மாநகர சபை தீர்மானத்தின் பிரகாரம் மிகுதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றது. | வழக்கு தொடருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| எ. | கீரிக்குளம் பிளிசறு செயற்திட்டத்திற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்த எக்ஸ்சவேட்டர் இயந்திரம் 2014 செப்தெம்பர் 18 ஆந் திகதி தீப்பிடித்தல் தொடர்பாக நடைபெற்ற முதலாவது விசாரணை அறிக்கையின் பிரகாரம் ரூபா 3.3 மில்லியன் நட்டத்தில் நான்கில் ஒரு பகுதி பெறுமதியான ரூபா 825,000 தொகை உரிய பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டுமென அந்த அறிக்கையில் பரிந்துரை செய்யப்பட்டிருந்த போதும் அந்தப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய ஒழுக்காற்று கட்டளைகளை விரைவாக பெற்று பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து பணத்தை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | உள்ளூராட்சி திணைக்களத்தினால் ஆரம்ப விசாரணையொன்று மேற்கொள்ளப் பட்டுள்ளதுடன் ஒழுக்காற்று கட்டளை பெற்றதன் பின்னர் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | உள்ளூராட்சி திணைக்களத்தால் ஆரம்ப விசாரணைகள் மேற்கொள்ளப் படுகின்றது. முறையான ஒழுக்காற்று கட்டளை இல்லாமையினால் அறவிடுவதற்கு முடியாதுள்ளது. |
| ஏ. | 2012 முதல் 2018 ஆம் ஆண்டு வரையான காலத்தில் மாநகர சபையில் ஏற்பட்டிருந்த இரண்டு மோசடிகளினால் சபை நிதியத்திற்கு ஏற்பட்டிருந்த ரூபா 47,174,493 நிதி ரீதியான நட்டத்தை தீர்ப்பதற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆதன வரி மோசடிக்காக முறையான ஒழுக்காற்று விசாரணையின் பிரகாரம் உரிய அறவிடல்கள் மேற்கொள்ள வேண்டியிருந்ததுடன் சம்பள மோசடிக்காக விரைவாக ஒழுக்காற்று பரிசோதனை நடாத்தி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஆதனவரி மோசடி தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முறையான ஒழுக்காற்று விசாரணையின் பிரகாரம் குற்றம் இழைத்துள்ள தரப்பினரிடமிருந்து ரூபா 6,322,302 தொகையை அறவிடுவதற்கு ஒழுக்காற்று கட்டளை வழங்கப்பட்டுள்ள போதும், அதற்காக அவர்கள் முறையீடு | ஆதனவரி மோசடியின் குற்றமிழைத்தவர் களிடமிருந்து பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. சம்பள மோசடிக்காக முறையான ஒழுக்காற்று விசாரணை நடாத்தப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | ஒன்றை சமர்ப்பித்திருந்தனர். சம்பள மோசடிக்காக முறையான ஒழுக்காற்று விசாரணை நடாத்தப்படவில்லை. | |
| ஐ. | மாநகர சபையில் சேவையாற்றி 2013 ஆம் ஆண்டின் போது வேறொரு நிறுவனத்திற்கு இடமாற்றலாகிச் சென்றிருந்த ஊழியருக்கு இடமாற்றலாகிச் சென்ற திகதி முதல் 2018 யூன் மாதம் வரையான காலப்பகுதிக்காக சம்பளம் மற்றும் படியாக ரூபா 1,816,557 தொகை செலுத்தப்பட்டமையினால் நிதியத்திற்கு ஏற்பட்டிருந்த நிதிரீதியான நட்டத்தை தீர்ப்பதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த பணத்தை அறவிடுவதற்காக விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இது தொடர்பாக ஆரம்ப விசாரணை மேற்கொள்ளப்பட்டு பணத்தை அறவிடுவதற்காக வலய கல்விப் பணிப்பாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | அறவிடப்பட்டிருக்க வில்லை. |

## 11. பொலன்னறுவை மாநகர சபை

---------------------------------------------------

| | | | | |
|---|---|---|---|---|
| அ. | கதுறுவெல பேரூந்து தரிப்பிட நிலையத்தில் 18 கடைகள் மற்றும் பொலன்னறுவை வைத்தியசாலை சந்தியில் 19 கடைகள் என்பவற்றின் நிலுவை முற்செலுத்தும் பணம் ரூபா 2,120,821 தொகை 01 வருடம் முதல் 21 வருடங்கள் வரையிலான காலவீச்சிலிருந்து | நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கும், உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தலும் வேண்டும். | கதுறுவெல பேரூந்து தரிப்பிட நிலைய கடை உரிமையாளர்களுக்கு எதிராக எதிர்காலத்தில் சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கும், வைத்தியசாலை சந்திக் கடைகள் தொடர்பாக மதிப்பீட்டு | சில கடைகள் முத்திரை வைக்கப்பட்டதன் பின்னர் வாடகை அறவிடப்படுவதுடன் அறவிடப்படாத கடைகளுக்காக மீள் நினைவூட்டல்களும் அனுப்பப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் பொலன்னறுவை பொது சந்தைத் தொகுதியில் 40 கடைகளில் ரூபா 18,088,750 தொகையான மீளச் செலுத்தப்படாத கட்டுநிதி மற்றும் அதில் 46 கடைகளில் மாதாந்த வாடகைப் பெறுமதி ரூபா 7,756,758 தொகை என்பவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | திணைக்களத்திலிருந்து பெறப்படுகின்ற பரிந்துரையின் அடிப்படையில் செயற்படுவதற்கும் பொதுச் சந்தைத் தொகுதி கடைகளுக்காக குறைபாடுகளை பூரணப்படுத்தியதன் பின்னர் உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. | |

## 12. இரத்தினபுரி மாநகர சபை

| | | | | |
|---|---|---|---|---|
| அ. | 2019 ஆம் ஆண்டு முதல் 2013 ஆகஸ்ட் வரையான காலத்திற்குரியதாக அறவிட வேண்டிய கூட்டுமொத்தமான ரூபா 4,366,496 தொகையான விருந்தினர் விடுதி வாடகை நகர அபிவிருத்தி அதிகார சபையிலிருந்து அறவிடுவதற்கோ அல்லது செலுத்த வேண்டிய கடன் பணத்திற்கு ஈடுசெய்யப்பட்டுள்ளதா என உறுதிப்படுத்துவதற்கோ சபை நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் 2013 செப்தெம்பர் முதல் 2017 செப்தெம்பர் வரையான காலத்திற்காக மேலும் அறவிட வேண்டிய ரூபா | உரிய பிரச்சினைகளை தீர்த்து வைத்து நிதிக்கூற்றுக்கள் சரி செய்யப்படல் வேண்டும். | நகர அபிவிருத்தி அதிகார சபையிலிருந்து அதற்குரிய தகவல்கள் உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் முறையான தகவல்களை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்ட கூற்றுக்களை வழங்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. | நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் 2022 பெப்ரவரி 09 ஆந் திகதி கலந்துரையாடப் பட்டிருந்ததுடன் அறிக்கை தயாரிக்கப்படுகின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | 156,121 தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. | | | |
| ஆ. | சப்ரகமுவ மாகாண சபை வீதி அபிவிருத்தி, கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சுற்றுலா அமைச்சின் நிதியேற்பாட்டின் அடிப்படையில் சபையினால் 2007 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரை 04 சந்தர்ப்பங்களின் போது கூட்டுமொத்தமாக ரூபா 2,822,902 செலவில் களுகங்கை அணை நிர்மாணிக்கப்பட்டு நகர பூங்கா காடு வளர்ந்து அழிவடைந்திருந்தமையினால் ஆக்கபூர்வமானதாக பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதியத்தை பயனுள்ளதாக பயன்படுத்துவது தொடர்பில் விசேட கவனம் செலுத்துதல் வேண்டும். | இந்த நிலம் சிறுவர் பூங்காவிற்காக அமைக்கப்பட்டிருந்த போதிலும் அவ்வவ்போது ஏற்படுகின்ற வெள்ளத்தின் காரணமாக பூங்கா பல சந்தர்ப்பங்களின் போது பாதிப்பிற்கு உட்பட்டிருந்தது. மேலும் இந்த பூங்காவினை பயனுள்ள நிலையமொன்றாக ஆக்குவதற்கு பல்வேறு திட்டங்களை அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்ட போதிலும் அவற்றை அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்தது. எனினும், தற்போது இரத்தினபுரி நகரத்திற்கு அத்தியவசியமான வாகனங்களை நிறுத்தி வைக்கும் இடமொன்றை அமைப்பதற்கு திட்ட மொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. | இன்னும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டிருக்க வில்லை. |
| இ. | இரத்தினபுரி நகரத்தில் அமைந்துள்ள பிரதான | சபைக்கு அறவிட வேண்டிய | மாநகர சபையின் தீர்மானத்தின் பிரகாரம் | ரூபா 2,380,000 தொகையான பழைய |

| | | | | |
|---|---|---|---|---|
| | பேரூந்து நிலைய தரிப்பிடத்தில் பேரூந்து நுழைவுக் கட்டணமாக 2009 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையான காலத்திற்குரிய சப்ரகமுவ பேரூந்து கம்பனியிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 2,380,000 தொகை 2020 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | வருமானங்களை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | மாதமொன்றிற்கு ரூபா 30,000 வீதம் அறவிடுவதற்கும் நிலுவைப் பணம் போக்குவரத்து அமைச்சின் ஊடாக பெற்றுக் கொள்வதற்கும் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் மாதாந்த பணம் அறவிடப்படுகின்றது. | நிலுவை அறவிடப்பட்டிருக்க வில்லை. |
| ஈ. | மாநகர சபைக்குச் சொந்தமான கணதொல கூட்டுப்பசளைத் தளத்தில் மின்தாங்கியொன்றை பொருத்துவதற்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் தலைவரினால் இணையத்தள தொடர்புடன் இனங்காணப்பட்ட 05 நிறுவனங்கள் பெயரிடப்பட்டு கேள்வி கோரப்பட்டிருந்தது. தொழில்நுட்ப குழுவின் பரிந்துரையின் பிரகாரம் பெறுமதிசேர் வரியுடன் ரூபா 990,525 பெறுமதியில் பெறுகை கையளிக்கப்பட்டிருந்த நிறுவனம் தவிர ஏனைய நிறுவனங்கள் மின்தாங்கியை வழங்கும் நிறுவனமாக இல்லாதிருந்தமை கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டது. அதன் பிரகாரம் பெறுகை கையளிக்கும் நோக்கத்தில் | பொருட்களை கொள்வனவு செய்தல் பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நியாயமான போட்டியினை உள்ளடக்கி தகுதியான கேள்விதாரர் தெரிவு செய்யப்படல் வேண்டும். | இரண்டு சந்தர்ப்பங்களின் போது கூறுவிலைகள் கோரப்பட்ட போதிலும் ஒரு நிறுவனம் மாத்திரம் கேள்வி சமர்ப்பித்தமையினால் கொள்வனவு செய்யப்பட்டதன் காரணமாக சபைக்கு நட்டம் ஏற்பட்டிருக்கவில்லை. | இலங்கை மின்சார சபையிலிருந்து இந்த மின்தாங்கி தொடர்பான தர அறிக்கையை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

கூறுவிலை சமர்ப்பித்த நிறுவனம் மற்றும் மின் தாங்கிகளை வழங்காத நிறுவனமான ஏனைய 04 நிறுவனங்களில் கேள்வி கோரப்பட்டு கையளிக்கப்பட்டிருந்தது.

## 13. கொழும்பு மாநகர சபை

-----------------------------------------

| | | | | |
|---|---|---|---|---|
| அ. | 2003 முதல் 2016 ஆம் ஆண்டு வரை இனங்காணப்பட்டிருந்த ரூபா 214,628,001 தொகையான நிலுவை ஆதன வரி செலுத்துவதற்கு காணப்பட்ட 193 ஆதனங்கள், அந்த ஆதனங்களின் உரிமையாளர்கள் தொடர்பான மற்றும் இறுதி தடவையில் உரித்து கோரப்பட்ட உரித்துறுதி மற்றும் நில வரைபடங்களை கண்டறிவதற்கு முடியாமையின் அடிப்படையில் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 259 ஆம் பிரிவின் பிரகாரம் விற்பனை சான்றிதழ் எழுதுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஏலமிடப்பட்ட போதிலும் இதுவரை உரித்துறுதி மூலம் சபைக்கு கையேற்கப்படாதிருந்த ஆதனங்களின் நிலுவை பணத்தை செலுத்துவதற்காக ஆதனவரி உரிமையாளர்களுக்கு கோரிக்கை சமர்ப்பித்தமையினால் நகர ஆணையாளரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் இந்த ஆதனங்களின் நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | 60 ஆதனங்களில் களப் பரிசோதனை மேற்கொண்டு நிலுவை ரூபா 4,797,916 தொகை அறவிடப்பட்டுள்ளது. |
| ஆ. | நகரத்தில் உள்ள 100 வருடங்களை விட பழைய மரங்களின் கிளைகள் மற்றும் | விரைவாக பயன்படுத்துவதற்கு தேவையான | இயந்திரத்தின் மூலம் வழங்கப்படுகின்ற தரவு பகுப்பாய்வு செய்யக் | தரவு பகுப்பாய்வு செய்யக் கூடிய வழிமுறைகள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | கட்டமைப்பின் நிலைமையை அளவிடுவதற்கும் பரீட்சிப்பதற்கும் 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 7.4 மில்லியன் செலவில் காணி மற்றும் சுற்றாடல் அபிவிருத்தி பிரிவினால் கொள்வனவு செய்யப்பட்ட மரங்களின் உட்கட்டமைப்பை பரீட்சிக்கும் இயந்திரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 06 வருடங்கள் கடந்திருந்த போதும் பயன்படுத்தப்படாமல் விகாரமகாதேவி பூங்கா அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்தது. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கூடிய உத்தியோகத்தரை சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் தரவு பகுப்பாய்விற்காக இயந்திரம் கொள்வனவு செய்த நிறுவனத்துடன் கலந்துரையாடலை நடாத்துதல். | பரீட்சிக்கப்படுகின்றது. |
| இ. | மல்வத்த வீதி நடைபாதை வியாபார தொகுதிக்காக ஒரு அலகு ரூபா 29,325 வீதம் 200 பக்கிகள் ரூபா 5,865,000 தொகையில் 2016 செப்தெம்பர் மாதம் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் இந்த பக்கிகள் ஆக்கபூர்வமான பணிகளில் ஈடுபடுத்தப்படாமல் இயற்கை அனர்த்தங்களுக்கு உட்பட்டு பாதுகாப்பற்ற வகையில் பயன்படுத்தப்படாத நிலையில் காணப்படுகின்றது. | ஆக்கபூர்வமான பணிகளுக்காக ஈடுபடுத்துதல் வேண்டும். | பக்கிகளை பெற்று கொள்ளும் வியபாரிகளினால் நிராகரிக்கப்பட்ட மையினால் ஆக்கபூர்வமான பணிகளில் ஈடுபடுத்த முடியாதிருந்த போதிலும் அந்த பக்கிகள் இன்னுமொரு பொது சந்தையின் தேவையின் அடிப்படையில் பயன்படுத்துவதற்காக அனுப்பப்பட்டுள்ளது. | ஆக்கபூர்வமான பணிகளில் ஈடுபடுத்தப்பட்டிருக்க வில்லை. |
| ஈ. | இடமாற்றலாகி வந்த மற்றும் ஓய்வு பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்கள் மற்றும் | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | திருமதி. ஜே.எம்.பீ ஜயவர்த்தன மற்றும் திரு. வீ.கே.ஏ அநுர | அறவிடல்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | 23 ஊழியர்கள் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் உத்தியோகபூர்வ இல்லங்களில் உரித்து கோரியிருந்தமையினால் தாபன விதிக் கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 7.2 ஆம் பிரிவின் பிரகாரம் தண்டப்பண வாடகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2020 யூன் வரையிலும் இடமாற்றலாகி வந்த இரண்டு நகர ஆணையாளரிடமிருந்து அறவிட வேண்டிய தண்டப்பண வாடகை ரூபா 27,100,751 ஆக கணிப்பிடப்பட்ட போதும், 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | | அவர்களுக்குரிய தண்டப்பண வாடகை கணிப்பிடப்பட்டு அவர்களின் சேவை நிலையங்களிலிருந்து அறவிடுவதற்காக அனுப்பப்பட்டுள்ளது. | |
| உ. | கட்டிட திட்டம் இலக்கம் ME/PBC/BA/01/18 இன் கீழ் இலக்கம் 32, முதலிகே மாவத்தை, கொழும்பு 01 இல் நிர்மாணிக்கப்பட்ட 07 மாடிகளையுடைய 2143.75 சதுரமீற்றர் அளவான கட்டிடம் (B+G+6) மற்றும் சுற்றாடலை பரீட்சித்த போது அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தில் காண்பிக்கப்பட்டுள்ள வெற்றிடத்தை மேவுகை செய்யும் வகையில் 05 மாடிகளையுடைய 533.46 | அனுமதியற்ற நிர்மாணங்கள் தொடர்பாக விரைவாக சட்டரீதியான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். | அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தின் பிரகாரம் பயன்பாட்டினை சரி செய்யுமாறும், அங்கீகரிக்கப்பட்ட திட்டத்திற்கு முரணாக மேற்கொள்ளப்பட்டுள்ள நிர்மாணங்களை அகற்றுமாறும் உரிமையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | சதுர மீற்றருடைய அனுமதியற்ற கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தின் பிரகாரம் தரைமாடி நிலமட்டத்தில் காணப்பட வேண்டிய போதிலும் கட்டிடத்தின் தரைமாடி தரை மட்டத்தை விட 380 மில்லிமீற்றர் உயரத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தின் பிரகாரம் முதலிகே மாவத்தையின் முடிவிலிருந்து 12 அடி மேவுகை (Arcade Line) அடையாளமிடப்பட்ட போதும் அந்த அளவினை மேவுகை செய்யும் வகையில் 40.61 சதுரமீற்றர் அனுமதியற்ற நிர்மாணம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தின் பிரகாரம் 04 வாகனங்களை தரித்து வைப்பதற்காக நிலக்கீழ் மாடியில் வசதிகள் வழங்கப்பட வேண்டியிருந்த போதிலும் வாகனங்களை தரித்து வைக்கும் பகுதி களஞ்சியமாக பயன்படுத்தப்பட்டிருந்தது. | | | |
| ஊ. | பாக்கறீன் மீற்றர் பொருத்துதல் தொடர்பாக தனியார் நிறுவனத்திடமிருந்து 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய நிலுவை வாடகை வருமானம் ரூபா 101,161,649 ஆகும். | விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. |

## 14. மொறட்டுவ மாநகர சபை

-------------------------------------------

| | | | | |
|---|---|---|---|---|
| அ. | 2003 முதல் 2015 ஆம் ஆண்டு வரை ஊழியர் சேமலாப நிதியத்திற்கு அறிக்கை மற்றும் பங்களிப்பு பணம் அனுப்புதல் தாமதத்தின் அடிப்படையில் ரூபா 1,549,200 மிகைக் கட்டணம் செலுத்தும் பொறுப்பொன்று சபைக்கு எழுந்திருந்ததுடன் 2015 முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலத்தின் போது சபையினால் செலுத்தப்பட்ட ரூபா 1,088,565 தொகை மற்றும் மிகுதிப் பணம் என்பன அதற்கு பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 156 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | உள்ளக கணக்காய்வு பிரிவினால் பரிசோதனை நடாத்தி நகர ஆணையாளருக்கு விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | விசாரணை அறிக்கையின் பெறுபேறுகளின் அடிப்படையில் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| ஆ. | 1329 ஆம் இலக்க நிதி திட்டமிடல் அங்கீகாரம் தொடர்பாக சபைக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கின் போது 2018 யூலை 20 ஆந் திகதி வழங்கப்பட்ட நீதிமன்ற கட்டளையின் பிரகாரம் முறைப்பாட்டாளருக்கு இழப்பீட்டு பணம் மற்றும் வழக்கு கட்டணமாக சபையினால் ரூபா 11,602,308 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணம் 156 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | உள்ளூராட்சித் திணைக்களத்தினால் ஆரம்ப விசாரணைகளுக்காக நடவடிக்கை மேற்கொள்ளப் படுகின்றது. | விசாரணை அறிக்கையின் பெறுபேற்றின் அடிப்படையில் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

## 15. நீர்கொழும்பு மாநகர சபை

----------------------------------------------

| | | | | |
|---|---|---|---|---|
| அ. | இரண்டு மாடி நூலகக் கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 157,101,803 தொகையில் ஒரு வருடத்தில் பூர்த்தி செய்வதற்கு உடன்படிக்கை செய்யப்பட்டு 2016 மார்ச் 16 ஆந் திகதி வேலை ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இதற்காக உள்நாட்டுக் கடன் அபிவிருத்தி நிதியத்திலிருந்து அங்கீகரிக்கப்பட்ட ரூபா 168,000,000 கடன் தொகையிலிருந்து தவணைப் பணம் செலுத்துவதற்காக வழங்கப்பட்டிருந்த 02 வருட சலுகைக் காலம் முடிவடைந்து 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 88,155,805 தொகை மாத்திரம் பெறப்பட்டிருந்தது. ஒப்பந்தகாரரின் கோரிக்கையின் பிரகாரம் தாமதக் கட்டணம் அறவிடப்படாமல் அவ்வவ்போது காலம் நீடிக்கப்பட்டிருந்ததுடன் உடன்படிக்கைக்கு முரணாக ஒப்பந்தக் கம்பனி மற்றும் மதியுரை நிறுவனத்துடன் கலந்துரையாடி உப ஒப்பந்தத்தை வழங்குதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவர்களும் நிர்மாணங்களை இடைநடுவில் நிறுத்தியிருந்ததுடன் | ஒப்பந்தகாரரை கறுப்பு பட்டியலில் இட்டு சபைக்கு ஏற்பட்ட நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2020 செப்தெம்பர் 30 ஆந் திகதிய ரூபா 4,700,000 பெறுமதியான காசோலை மூலம் இரத்துச் செய்யப்பட்ட பிணை முறிக்குரிய பணம் சபைக்கு பெறப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | ஆரம்ப ஒப்பந்தகாரரின் செயலாற்றல் நலிவு மட்டத்தில் காணப்பட்டமையின் அடிப்படையில் மிகுதி வேலைகளுக்காக மீண்டும் கேள்வி கோரி ஒப்பந்தகாரர் தெரிவு செய்யப்பட்டிருந்த போதிலும், மதிப்பீடு மற்றும் விலை முரண்கள் காணப்படுகின்ற விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடலுக்கு கோரப்பட்ட போதிலும் ஒப்பந்தகாரர் வருகை தராதிருந்ததுடன் இதற்காக சபையின் உறுப்பினர் குழுவொன்றினால் வழக்கு தொடரப்பட்ட மையினால் இந்த நிர்மாணங்கள் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | உடன்படிக்கை செய்யப்பட்ட கடப்பாடொன்று இன்றியமையினால் சட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுப்பதற்கு முடியாதிருந்தது. 2020 மார்ச் 11 ஆந் திகதி உடன்படிக்கையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒப்பந்தக் கம்பனியிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 2,427,020 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2020 யூன் வரையிலும் அந்த செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | | | |
| ஆ. | மீபுற காணியில் வளங்களை மீள்சுழற்சி செய்யும் நிலையமொன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 9,901,223 தொகையான ஒப்பந்தப் பெறுமதியில் 2020 திசெம்பர் மாதம் 21 ஆந் திகதி உடன்படிக்கை செய்யப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தகாரர் அதன் ஆரம்ப வேலைகளை ஆரம்பித்திருந்தார். மீபுற காணியில் நிர்மாணிப்பதற்கு தீர்மானிக்கப்பட்ட இந்த நிர்மாணம் நிறுத்தப்பட்டு கொச்சிக்கடை பழைய | நிர்மாணிப்பதற்கு முன்னர் மதிப்பீட்டிற்காக சபை அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். | நகர வாசிகளின் ஆர்ப்பாட்டத்தின் காரணமாக இடத்தை மாற்றவேண்டி ஏற்பட்டது. | இதன் ஆரம்ப செயற்திட்டத்திற்கான மதிப்பீடு சபையில் அங்கீகரிக்கப் பட்டிருந்ததுடன் போரகேவத்த காணியில் இந்த செயற்திட்டத்தை நிறைவேற்றுவதற்காக சபை முன்மொழிவொன்று செய்திருந்தமையை அறியத் தருகின்றோம். |

அறுவைக்கூடம் அமைந்துள்ள காணி இதற்காக தெரிவு செய்யப்பட்டு ஒப்பந்தகாரருக்கு நிர்மாணங்கள் கையளிக்கப்பட்டுள்ளதுடன் புதிய காணியின் நிர்மாணத்திற்காக மீண்டும் ஒப்பந்தகாரருடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்க வில்லை. 2021 ஏப்ரல் 01 ஆந் திகதி நடைபெற்ற பொதுக்கூட்டத்தின் போது புதிய நிர்மாணத்திற்கான அங்கீகாரம் வழங்கப்பட்ட போதிலும் இதன் மதிப்பீடு சபையின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்படாமையினால் சபை அங்கீகாரத்திற்கு முன்னர் நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தமை 2021 ஏப்ரல் 05 ஆந் திகதி களப்பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டதுடன் அத்திகதி வரையில் கட்டிடத்தின் அடித்தளம் மற்றும் தூண்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்ததை காணக்கூடியதாக இருந்தது. மீபுற காணியின் இது நிர்மாணிக்கப்படாதிருந்தமை குறிப்பிடப்பிடுவது 2021 பெப்ரவரி 05 ஆந் திகதியாக இருந்ததுடன் 03 கட்டங்களில் கிடைக்க வேண்டிய நிதியேற்பாடுகளில் ஒரு

| | | | | |
|---|---|---|---|---|
| | கட்டத்தின் நிதியேற்பாடான ரூபா 3,679,900 தொகை 2020 நவம்பர் 02 ஆந் திகதியளவில் கிடைத்திருந்தது. நிலம் மாற்றப்பட்டமை காண்பிக்கப்படாமல் அத்திவார வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு மற்றும் ஒப்பந்தங்கள் செய்யப்பட்டு கொண்டிருக்கின்றமை குறிப்பிடப்பட்டு இரண்டாவது கட்டத்தின் நிதியேற்பாடான ரூபா 2,633,300 தொகை 2021 மார்ச் 31 ஆந் திகதி பெறப்பட்டிருந்தது. | | | |
| இ. | ஏத்துக்கால கடற்கரை பூங்காவில் வாகனத் தரிப்பிடக் கட்டணம் அறவிடல் தொடர்பான பிணைமுறி 2003 ஆம் ஆண்டு முதல் 04 வருடங்கள் வரை கேள்வி கோரி கையளிக்கப்பட்டிருந்த துடன் அடுத்துவரும் 10 வருடங்களுக்காக 5 சதவீதம், 10 சதவீதம் மற்றும் 20 சதவீதம் என்ற சதவீதத்தில் அதிகரித்து மீண்டும் 2017 ஆம் ஆண்டில் கேள்வி கோரல்களும், 2018 ஆம் ஆண்டிற்காக 2017 இன் விலையில் 20 சதவீதமும், 2019 ஆம் ஆண்டிற்கு 2018 ஆம் ஆண்டின் வாடகைத் தொகையில் 10 சதவீதமும் அதிகரித்து ரூபா 2,244,000 தொகையிலும் ஆரம்பம் | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | சபைத் தீர்மானத்தின் பிரகாரம் வழங்கப்பட்டுள்ளதை அறியத்தருகின்றோம். | கேள்வி கோருவதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளது. |

முதல் இதுவரை ஒருவருக்கு வழங்கப்பட்டிருந்தது. 2020 ஆம் ஆண்டிற்காக கடந்த வருடத்தில் வாடகைப் பணத்தில் முன்னைய வாடகையாளருக்கு வழங்குவதற்கு 2019 ஒக்தோபர் 05 ஆந் திகதி சபை தீர்மானித்திருந்ததுடன் உள்ளூராட்சி ஆணையாளரின் 2019 யூலை 24 ஆந் திகதிய LGD/06/05/MOS/2019 ஆம் இலக்க கடிதத்தின் படி சபையின் ஆதனங்களை வாடகைக்கு வழங்கும் நடைமுறையை முறைமைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும், இதற்காக பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. சபைத் தீர்மானம் கிடைப்பதற்கு முன்னர் 2019 ஆகஸ்ட் 29 ஆந் திகதி வேறொருவரினால் 2020 ஆம் ஆண்டிற்காக இந்த வாகனத் தரிப்பிடம் ரூபா 30 இலட்சத்திற்கு வாடகைக்கு எடுப்பதற்கு விருப்பம் தெரிவித்து கோரப்பட்டிருந்தமை நகர ஆணையாளரினால் 2019 செப்தெம்பர் 20 ஆந் திகதி அறிக்கையிடப்பட்டிருந்த

போது அந்த தொகையினை விட தொகையான ரூபா 2,244,000 இற்கு 2020 ஆம் ஆண்டிற்காக முன்னைய வாடகையாளருக்கு வழங்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக ரூபா 756,000 நட்டமொன்று சபை நிதியத்திற்கு ஏற்பட்டிருந்தது.

## 16. கம்பஹா மாநகர சபை

| | | | | |
|---|---|---|---|---|
| அ. | 2019 திசெம்பர் 24 ஆந் திகதிய 2155/6 ஆம் இலக்க வர்த்தமானி பத்திரத்தில் 1 ஆவது அத்தியாயத்தின் 25 ஆம் பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் நகர பிதாவாக உப நகராதிபதியோ அல்லது வேறொருவரோ அல்லது உறுப்பினரோ, நகர ஆணையாளரோ அல்லது வேறு எந்தவொரு உத்தியோகத்தருக்கும் உள்ளூராட்சி நிறுவனத்தின் பிரதிநிதி ஒருவருக்கு, உத்தியோகத்தர் என கருதப்படுகின்றவர்களுக்கு கையளிக்கப்படுகின்ற அல்ல நன்கொடையாக அல்லது பரிசாக அல்லது மாநகர சபைக்கு மேற்கொள்ளப்பட்ட மானியமாக கருதி நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் அவ்வாறான நன்கொடைகள் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 185 ஆம் பிரிவின் | மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 185 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நகர பிதாவின் சமூக பணிகளுக்காக ஏற்படுத்திய நலன்புரி மற்றும் நம்பிக்கையின் அடிப்படையில் சபை நிதியத்திற்கு வழங்கப்படாத பணங்களை பெறும் முறைமையாக நகராதிபதி நிதியத்தை அறிமுகப்படுத்த முடியும். நகராதிபதி நிதியத்தின் சகல செலவினங்களும் காசோலைகள் மூலம் மாத்திரம் மேற்கொள்ளப் பட்டுள்ளதை அறியத் தருகின்றோம். மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 185 ஆம் இலக்கத்தின் கீழ் கிடைக்கின்ற சகல வருமானங்களும் 188 ஆம் இலக்கத்தின் கீழ் மேற்கொள்ளப் படுகின்ற சகல | நகராதிபதி நிதியம் சகல மாநகர சபைகளினாலும் பேணிச் செல்லப்படுகின்ற நிதியமாகும். அதன் பிரகாரம் நகராதிபதி நிதியம் கம்பஹா மாநகர சபையிலும் பேணிச் செல்லப்படுகின்றது. நகராதிபதியின் சமூக பணிகளுக்காக ஏற்படுத்தப்பட்ட நலன்புரி மற்றும் நம்பிக்கையின் அடிப்படையில் சபை நிதியத்திற்கு வழங்கப்படாத பணங்களை பெறும் முறைமையொன்றாக நகராதிபதி நிதியத்தை அறிமுகப்படுத்த முடியும். நகரத்தின் பிரதான பிரஜையாக நடவடிக்கை எடுக்கும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | பிரகாரம் மாநகர சபை நிதியத்திற்கு செலவு வைக்கப்படல் வேண்டும். எனினும் கம்பஹா அரசாங்க வங்கியொன்றின் கீழ் நகர பிதாவின் நிதியத்தின் பெயரில் வங்கிக் கணக்கொன்று, நகர பிதாவிற்கு கிடைக்கின்ற நன்கொடைகளில் பேணிச் செல்லப்பட்டிருந்ததுடன் 2020 ஆம் ஆண்டின் யூலை மாதம் முதல் திசெம்பர் வரையான 06 மாத காலத்தில் 09 சந்தர்ப்பங்களில் கூட்டுப் பெறுமதி ரூபா 1,028,743 தொகை கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் 29 சந்தர்ப்பங்களின் போது கூட்டுப்பெறுமதி ரூபா 1,016,425 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இந்த கொடுக்கல் வாங்கலுக்குரிய அடியிதழ்கள், பற்றுச்சீட்டுக்கள், கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் அல்லது ஏற்றுக்கொள்ளக் கூடிய எந்தவொரு ஆவணமும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | செலவினங்களும் சபை நிதியத்தின் கீழ் மேற்கொள்ளப் படுகின்றது என அறியத்தருகின்றோம். நகராதிபதி நிதியத்தின் சகல செலவினங்களும் காசோலைகள் மூலம் மாத்திரம் மேற்கொள்ளப் படுகின்றது என்பதை சுட்டிக் காட்டுகின்றோம். இதற்குரிய அடியிதழ்கள், பற்றுச்சீட்டுக்கள், கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள் போன்ற ஆவணங்களை பெற்றுக்கொள்வதற்கு நகராதிபதி அலுவலகம் கொவிட் தொற்று நோயின் அடிப்படையில் மூடப்பட்டிருந்த மையினால் முடியாதிருந்தது. அதற்கான காலமொன்று வழங்குமாறு கோருகின்றோம். | போது அதிகார பிரதேசத்தில் வறுமைக்கு உட்பட்டவர்களுக்கு நன்கொடைகள் மற்றும் மலசலகூடம் இன்றியவர்களுக்கு மற்றும் மலசலகூடம் உடைந்த நிலையில் காணப்படுகின்ற வர்களுக்கு, மற்றும் அவசர வெள்ளம் மற்றும் கொரோனாக்கு உட்படல் போன்ற தொற்றுநோய் சந்தர்ப்பங்களின் போது உலர் உணவுகள் மற்றும் உணவு பார்சல்களை பகிர்ந்தளித்தல் போன்ற மிகவும் அவசர நடவடிக்கை களுக்காக இந்த நிதியம் பயன்படுத்தப் படுகின்றது. |
| ஆ. | 2020 ஆம் ஆண்டில் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 05 சினிமா மண்டபங்களிலிருந்து ரூபா 5,067,942 பெறுமதியான நிலுவைக் களியாட்டவரி | நிலுவை வருமான வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | சினிமா மண்டபங்கள் திறக்கப்பட்டதும் நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். பப்ளிக் | 2010 ஆம் ஆண்டு முதல் பப்ளிக் சினிமா மண்டபத்தின் வாடகை வரி செலுத்தாமையால் இந்த நிலுவை வரி |

| | | | | |
|---|---|---|---|---|
| | வருமானம் அறவிட வேண்டிக் காணப்பட்டதுடன் அதில் ரூபா 4,793,162 தொகையான நிலுவை பெறுமதியொன்று பப்ளிக் சினிமா மண்டபத்திலிருந்து அறவிடுவதற்கு காணப்பட்டது. | | சினிமா மண்டபத்தின் வழக்கு தீர்ப்பின் பிரகாரம் நிறுவனம் நடவடிக்கை எடுக்காமையால் வழக்கு நடவடிக்கைகளை நாளதுவரையாக்கு வதற்காக நகர சட்ட உத்தியோகத்தருக்கு கோவை அனுப்பப்பட்டுள்ளது. | மீதி காணப்படுகின்றது. அதற்காக அந்த வரியை புறக்கணித்தமைக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டிருந்த துடன் மேலும் 2021 வரை நாளதுவரையாக்கி உள்ள நிலுவை மீதிக்காகவும் சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்காக சட்ட உத்தியோகத்தருக்கு அனுப்பப்பட்டுள்ளது. |
| இ. | 2020 ஆம் ஆண்டில் தனியார் காணியொன்றில் கழிவுப் பொருட்கள் அகற்றியதன் காரணமாக காணி உரிமையாளருக்கு ரூபா 29,127,000 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் 2020 செப்தெம்பர் 07 ஆந் திகதி கழிவுகளை அகற்றுகின்ற இடம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் பிரகாரம் சுற்றாடலுக்கு தாக்கமளித்தமை மற்றும் சுகாதாரத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் கழிவு மலை குவிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் கழிவுப் பொருட்களை | கழிவுப் பொருட்களை அகற்றும் பணிகளுக்காக முறையான கேள்வி நடைமுறை பின்பற்றி கழிவுகளை அகற்றுபவர்கள் தெரிவு செய்யப்பட வேண்டியிருந்ததுடன் முறையான கொடுப்பனவுகள் மற்றும் கழிவுப் பொருட்களை அகற்றுகின்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். மேலும் நீதிமன்றம் வழங்கிய கட்டளையை அமுல்படுத்துவதற்கும் | 2019 ஆம் ஆண்டில் கம்பஹா மாநகர சபையின் கழிவுப் பொருட்கள் கெரவலப்பிட்டிய கழிவுத் தளத்திற்கு அகற்றுதல் மேற்கொள்ளப் பட்டிருந்ததுடன் கௌரவ ஆளுனரின் ஆலோசனையின் பிரகாரம் உள்ளூராட்சி ஆணையாளரின் 2019.08.02 ஆந் திகதிய LGD/03/02/4/27 ஆம் இலக்க கடிதத்தின் ஆலோசனைகளின் பிரகாரம் சபை தீர்மானம் எடுத்து | இந்த காலப் பகுதியின் போது கெரவலப்பிட்டிய கழிவுப் பொருள் தளத்தில் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுத்தமையினால் கௌரவ ஆளுனரின் ஆலோசனையின் பிரகாரம் உள்ளூராட்சி ஆணையாளரின் 2019.08.02 ஆந் திகதிய LGD/3/2/4/27 ஆம் இலக்க கடிதத்தின் ஆலோசனையின் பிரகாரம் சபைத் தீர்மானமொன்று |

| | | | | |
|---|---|---|---|---|
| | அகற்றுகின்ற இடத்தில் சுகாதார பாதுகாப்பு தொடர்பாக மேற்பார்வை மற்றும் அது தொடர்பான அறிக்கையொன்று கம்பஹா நீதிமன்றத்தினால் சபையின் சுகாதார பரிசோதருக்கு வழங்கப்பட்டிருந்த கட்டளையின் பிரகாரம் சபை நடவடிக்கை எடுக்காதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தனியார் காணியொன்றில் கழிவுப் பொருட்களை அகற்றுதல் மேற்கொள்ளப் பட்டிருந்தது. இந்த இடத்தில் கூட்டுப்பசளை உற்பத்தி இயந்திரமொன்று பொருத்தப்பட்டுள்ளது. அதனை அமுல்படுத்துவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. உரிய அனுமதிப்பத்திரிம் பெறப்படாதிருந்த மையால் அதற்காக 03 மாதங்களை உள்ளடக்கிய அனுமதிப் பத்திரத்தை வழங்குமாறும் அதன் பிரதியொன்று எங்களுக்கு சமர்ப்பிக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. | எடுத்து தனியார் காணியொன்றில் கழிவுப் பொருட்களை அகற்றுதல் மேற்கொள்ளப் படுகின்றது. தனியார் உரிமையாளரினால் விலைப்பட்டியலுக்கு மற்றும் சமமான ஆவணங்களும் சமர்ப்பிக்கப் பட்டிருந்ததுடன் முறையான விலைப் பட்டியல் சமர்ப்பிக்குமாறு அறிவித்து அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## 17. தெஹிவளை கல்கிஸ்ஸ மாநகர சபை

| | | | | |
|---|---|---|---|---|
| அ. | மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 185(2)(உ) இன் ஏற்பாடுகளுக்கு முரணாக நானாவித வருமானம், ஆதனவரி மற்றும் திட்டமிடல் பிரிவுகளில் பொதுமக்களின் சேவைகளை வழங்குதல் 2019 சனவரி முதல் யூன் | மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 185(2)(உ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | சபைக்கு வருமானத்தை உழைப்பதற்கு இந்த பதவியணியினர் மேலதிக சேவையாற்றி இருந்தனர். அதனால் ஊக்குவிப்பு படியாக 2005 ஆம் ஆண்டின் | முறையான பிரகாரம் அங்கீகாரம் பெறப்பட்டிருக்க வில்லை. 2020 மற்றும் 2021 இன் போது முறையே ரூபா 1,457,923 மற்றும் ரூபா 771,197 |

| | | | | |
|---|---|---|---|---|
| | வரை உழைக்கப்பட்ட வருமானத்தில் ரூபா 1,181,197 தொகை முறையான அங்கீகாரமின்றி 27 உத்தியோகத்தர்களுக்கு இடையே பகிர்ந்தளிக்கப் பட்டிருந்தது. | | போது 2004.11.29/08(09) 15 ஆம் இலக்க சபை அங்கீகாரத்தின் பிரகாரம் அறவிடப்படுகின்ற ரூபா 200 தொகை கோவையில் பணிகளுக்கு பங்குபற்றுகின்ற ஒட்டுமொத்த பணியாளர்களுக்கு இடையே பகிர்ந்தளிக்கப் படுகின்றது. | தொகைகள் பகிர்ந்தளிக்கப் பட்டிருந்தது. |
| ஆ. | வனரத்தன வீதி முதல் பொன்சேகா வீதி வரையான காணிகளை கைப்பற்றுவதற்காக 2018 பெப்ரவரி மாதம் ரூபா 4,500,000 தொகை பிரதேச செயலாளருக்கு வைப்புச் செய்யப்பட்டிருந்த போதிலும் 2019 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் காணிகளை கைப்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் 02 குடும்பங்கள் மாத்திரம் நேரான வழியை பெற்று அந்த வீதியை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட செலவினத்தை ஒப்பிட்டு பார்க்கும் போது கிடைக்கின்ற நலன்கள் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | மிகவும் ஆக்கபூர்வமான பணிகளுக்காக பணம் ஈடுபடுத்தப்படல் வேண்டும். | சபை அங்கீகாரத்துடன் இந்த வீதி அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. | 2021 இன் இறுதி வரையிலும் காணிகளை கைப்பற்றுவதற்காக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| இ. | பிறேசர் விளையாட்டு மைதானத்தில் உள்ளக விளையாட்டரங்கை நிர்மாணித்தல் மற்றும் தெஹிவளை பொது விளையாட்டு மைதானத்தில் உள்ளக விளையாட்டரங்கை நிர்மாணிப்பதற்காக முறையே ரூபா 50,000,000 மற்றும் ரூபா 60,000,000 ஆக கூட்டுமொத்தமாக ரூபா 110,000,000 செலவினமொன்று 2018 இன் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட போதிலும் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் இந்த வேலைகள் இரண்டினதும் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தை விரைவாக நிறைவேற்றுதல் வேண்டும். | மிகவும் விரைவாக வேலையை பூர்த்தி செய்து மக்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இதன் நிதி செயல்முன்னேற்றம் 22 சதவீதம் மற்றும் பௌதீக செயல்முன்னேற்றம் 12 சதவீதம் ஆகும். |
| ஈ. | 01 றூட் 4.19 பேர்ச் பரப்பளவான கல்கிஸ்ஸ வத்த என்ற பெயருடைய காணி வெளித்தரப்பினர் ஒருவரினால் அனுமதியற்ற வகையில் உரிமை கோரப்பட்டிருந்தது. | அனுமதியற்ற வகையில் உரிமை கோருகின்ற தரப்பினரிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இது தொடர்பாக எதிர்காலத்தில் குழுவொன்று நியமித்து ஆராய்ந்து நடவடிக்கை எடுத்து கணக்காய்விற்கு உரிய தகவல்கள் சமர்ப்பிக்கப்படும். | இதற்காக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| உ. | கல்கிஸ்ஸ ஹோட்டல் வீதியில் இலக்கம் 4/89 என்ற நிலை வரைபடத் திட்டத்தில் 01 றூட் 4.10 பேர்ச் அளவான காணி வாகனம் நிறுத்தும் இடமாக பயன்படுத்துவதற்காக கல்கிஸ்ஸ ஹோட்டலிற்கு | நிலுவை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இது தொடர்பாக கல்கிஸ்ஸ நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணையில் காணப்படுகின்றது. மேலும் இந்த ஹோட்டல் மற்றும் நகர சபைக்கிடையே | நிலுவை வாடகை அறவிடப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் இந்த ஆதனத்தை வாடகைக்கு வழங்கும் போது உடன்படிக்கையில் காணப்பட்ட குறைபாடுகளின் காரணமாக 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் இந்த ஆதனத்தின் நிலுவை வாடகை ரூபா 4,636,516 ஆக காணப்பட்டதுடன் அந்த வாடகைப் பணத்தை வாடகையாளரிடமிருந்து அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | | காணப்பட்ட வாடகைக் காலம் 2021.06.01 ஆந் திகதியில் முடிவடைந்திருந்ததுடன் மீண்டும் வாடகைக்கு வழங்குதல் மேற்கொள்ளப்பட வில்லை. அந்தக் காணி சபையினால் வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளைச் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | |
| **18.** | **கடுவெல மாநகர சபை** | | | |
| அ. | 2013 ஆம் ஆண்டில் கடுவெல பேருந்து தரிப்பிட நிலையத்தில் பொருத்தப்பட்டிருந்த ரூபா 3,900,000 பெறுமதியான மின் பாரந்தூக்கி செயலிழந்த நிலைமையில் காணப்பட்டதுடன் அதனை பழுதுபார்த்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வளங்களில் இருந்து உச்ச பயன்பாட்டை பெறுதல் வேண்டும். | ஏனைய முகவர் நிறுவனங்களிலிருந்து அல்லது சிலவற்றை பரீட்சித்து பார்க்குமாறு கோரிக்கை சமர்ப்பித்து மீண்டும் செயற்படுத்துவதற்கு முடியுமான நிலைமையை கொண்டு வருவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | 2016 ஆம் ஆண்டு ஏற்பட்டிருந்த அதிக மழையின் காரணமாக கடுவெல நகரம் முழுவதும் வெள்ளநீருக்கு உட்பட்டமையின் காரணமாக மின்பாரந்தூக்கி செயலிழந்திருந்தது. இந்த சந்தர்ப்பத்தில் மின்பாரந்தூக்கியை பழுதுபார்ப்பதற்காக மேற்கூறப்பட்ட கொள்வனவு செய்யப்பட்ட நிறுவனத்துடன் தொடர்பு கொள்வதற்கு முயற்சிக்கப்பட்ட |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | போதிலும் அந்த நிறுவனம் மூடப்பட்டமையின் காரணமாக அந்தப் பணிகளை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது. |
| ஆ. | நகர சபை அதிகாரப் பிரதேசத்தில் வீதிகளில் காபட் இடுவதற்காக 2017 ஒக்தோபர் 20 ஆந் திகதி ரூபா 66,612,046 செலவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த 06 இயந்திர பொறிமுறைகளில் ரூபா 53,351,000 பெறுமதியான 04 இயந்திரங்கள் எந்தவொரு பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் அத்துருகிரிய உப அலுவலக வளவில் விளைவற்று வைக்கப்பட்டிருந்தது. | சபை ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்க ளிலிருந்து ஆகக்கூடிய பயன்பாட்டை பெறுதல் வேண்டும். | தவிர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | காபட் இடும் அலகொன்றை தாபிக்கும் நோக்கத்தில் உரிய இயந்திர பொறிமுறைகள் கொள்வனவு செய்யப்பட்ட போதும் அரசாங்கத்தில் அங்கீகரிக்கப்பட்ட சம்பள அளவுத் திட்டத்தில் ஊழியர்களை ஈடுபடுத்துவதற்கு பயிற்சி ஊழியங்களை பெறுவதிலுள்ள வசதியீனத்தின் அடிப்படையில் அந்த அலகை தாபிப்பதற்கு முடியாதிருந்தது. 2020.03.03 ஆந் திகதி நடைபெற்ற பொதுக்கூட்டத்தின் போது அந்த இயந்திரத்தை விற்பனை செய்வதற்காக தீர்மானிக்கப்பட்டு அதன் பிரகாரம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | கேள்வி கோருதல் மேற்கொள்ளப்பட்ட போதிலும் எந்தவொரு விண்ணப்பதாரியும் முன்வந்திருக்க வில்லை. |

## 19. ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே மாநகர சபை

---------------------------------------------------------------------

| | | | | |
|---|---|---|---|---|
| அ. | ரூபா 619,276,616 ஒப்பந்த பெறுமதியில் பிட்டகோட்டே ஜய ரஜ சிற்றி நானாவித அபிவிருத்தி செயற்திட்டமொன்றை நிர்மாணிப்பதற்காக தனியார் ஒப்பந்தகாரருடன் 2016 பெப்ரவரி 15 ஆந் திகதி உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. அதற்காக ஆலோசனைக் கட்டணமாக ரூபா 2,638,191 தொகையை உள்ளடக்கிய மொத்த செலவினம் ரூபா 255,707,477 தொகை 2018 ஆம் ஆண்டு வரை செலவிடப்பட்டிருந்ததுடன் கட்டிடத்தின் உட்கட்டமைப்பில் வெடிப்புக்களின் அடிப்படையில் சபையினால் 2017 மே 17 ஆந் திகதி செயற்திட்டத்தின் வேலைகள் நிறுத்தப்பட்டிருந்ததுடன் 2018 செப்தெம்பர் 10 ஆந் திகதி ஒப்பந்தகாரர் வேலைத் தளத்தை கைவிட்டுச் சென்றிருந்தார். | சபைக்கு செலவாகியுள்ள மொத்த பெறுமதியையும் அறவிடுவதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அந்த ஒப்பந்தகாரரினால் மீண்டும் செயற்திட்டத்தை பூர்த்தி செய்யும் இயலுமை ஆய்வு செய்யப்படுகின்றது. | அந்த ஒப்பந்தகாரரினால் மீண்டும் செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கான சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப் படுகின்றது. இதற்காக செலவிடப்பட்ட மொத்த செலவினம் ரூபா 255,707,477 இல் நிலமட்டம் வரை மாத்திரம் மேற்கொள்ளப் பட்டிருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| ஆ. | மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 69,704,581 தொகையான 28 வீட்டு அலகுகளிலிருந்து ஒட்டுமொத்தமாக மொரகஸ்முல்ல நான்கு மாடிக் கட்டிடத் தொகுதியை 06 மாத கால எல்லையின் போது வேலை பூர்த்தி செய்து கையளிப்பதற்காக 2016 யூன் 01 ஆந் திகதி உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. இதற்காக ஒப்பந்தகாரருக்கு ரூபா 62,986,117 மற்றும் மேலதிக வேலைக்காக ரூபா 7,538,424 தொகையை உள்ளடக்கி ரூபா 70,524,541 செலுத்தப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்தகாரர் வேலையை பூர்த்தி செய்யாமல் வேலையை கைவிட்டிருந்தார். மேலும் 2019 ஆம் ஆண்டின் போதும் ஒப்பந்தகாரர் புறம்பாக சபையின் மறைமுக ஊழியங்களை ஈடுபடுத்தி 18 வீட்டு அலகுகளுக்காக ரூபா 3,630,781 தொகையான மூலப்பொருள் கிரயம் மற்றும் ரூபா 155,726 தொகையான உணவு, நீர், மின்சாரம் என்பவற்றுக்காக செலவிடப்பட்டிருந்த போதிலும் வேலை பூர்த்தி செய்யப்படாமல் செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்தது. | சபையின் செயற்பாட்டு நடவடிக்கைகள் சரியான திட்ட முறைமையின் பிரகாரம் மேற்கொள்ளப்படல் வேண்டும். | மீண்டும் அந்தக் கட்டிடத்தின் நிர்மாண நடவடிக்கைகளை ஆரம்பித்து செயற்திட்டத்தை பூர்த்திசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| இ. | வெலிக்கட பொலிசிற்கு அருகில் அமைந்துள்ள சபைக்குச் சொந்தமான காணியொன்றில் புதிய நகர சபை அலுவலக கட்டிடத்தை புதிதாக நிர்மாணிப்பதற்குரிய உள்ளக நிர்மாண நடவடிக்கைகளுக்காக ரூபா 36,010,657 தொகையான கட்டணத்தின் கீழ் மதியுரைக் கம்பனியொன்றுடன் 2015 சனவரி 26 ஆந் திகதி உடன்படிக்கை செய்யப்பட்டு ரூபா 22,220,340 தொகை செலுத்தப்பட்டிருந்தது. 2015 மே 07 ஆந் திகதிய சபைத் தீர்மானத்தின் அடிப்படையில் மேற்கூறப்பட்ட நிர்மாணங்கள் தற்போது காணப்படுகின்ற சபை வளவில் நிர்மாணிப்பதற்காக ஆலோசனைக் கம்பனியுடன் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 4,000,000 தொகை செலுத்தப்பட்டிருந்த போதும், 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. சபையினால் அறவிட வேண்டிய ரூபா 15,138,788 தொகையை அறவிடுவதற்காக ஆலோசனைக் கம்பனியால் சபைக்கு எதிராக பிணக்குகள் தீர்க்கும் வழக்கொன்று | பாரியளவிலான நிர்மாணங்களை செய்வதற்கு முன்னர் இடத்தை குறிப்பாக இனங்காண வேண்டியிருந்ததுடன் அதற்காக செலவிடுவதற்கு உள்ள செலவின மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும். பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | வெலிக்கட பொலிசிற்கு அருகில் உள்ள காணியில் புதிய நகர சபைக் கட்டிடம் நிர்மாணித்தல் தொடர்பாக பிணக்குகள் தீர்க்கும் வழக்கு தீர்ப்பை அமுல்படுத்துவதற்கு ஆலேசனைக் கம்பனி இணங்கியிருந்தது. எனினும், பிணக்குகள் தீர்த்தலின் பிரகாரம் கொடுப்பனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வில்லை. | பிணக்குகள் தீர்க்கும் வழக்குத் தீர்ப்பை சட்டரீதியாக மேற்கொள்வதற்காக ஆலோசனைக் கம்பனிக்கு நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | தொடுக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக வழக்கு கட்டணமாக ரூபா 259,000 தொகை செலவிடப்பட்டிருந்தது. அதனால் இந்த ஒப்பந்தத்திற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 26,479,340 தொகை சிக்கனமற்ற மற்றும் ஆக்கபூர்வமானதாக இல்லாத செலவினத்திற்கு உட்பட்டிருந்தது. | | | |
| ஈ. | சபைக்கு சொந்தமாக காணப்பட்ட ரூபா 7,000,000 பெறுமதியான கெப் வண்டி 2017 ஆகஸ்ட் 15 ஆந் திகதி மேல் மாகாண ஆளுனரின் செயலாளரின் உத்தியோகபூர்வ வாகனமாக பயன்படுத்துவதற்கு கையளிக்கப்பட்டிருந்த போது தீப்பிடித்து அழிவடைந்திருந்தது. வாகனத்தின் தற்போதைய சந்தைப் பெறுமதி மற்றும் சபைக்கு செலவாகிய மேலதிக செலவினம் ரூபா 7,046,180 ஆக இருந்ததுடன் கிடைத்த காப்புறுதி இழப்பீட்டுப் பணத்தின் பிரகாரம் சபைக்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 1,546,180 தொகையை அறவிடுவதற்கு சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நட்டத்தை அறவிடுவதற்கு சட்டரீதியான நடவடிக்கைகள் தாமதமின்றி எடுக்கப்படல் வேண்டும். | மிகுதிப் பணத்தை அறவிடுவதற்காக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை அறிக்கைக்கு எதிராக எதிர்ப்பொன்று சமர்ப்பித்தமையால் மீண்டும் பரிசோதனை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ரூபா 1,546,180 தொகையை அறவிடுவதற்காக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை அறிக்கைக்கு எதிர்ப்பொன்று சமர்ப்பித்தமைக்காக மீண்டும் பரிசோதனையொன்று மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## 20. குருணாகல் மாநகர சபை

-------------------------------------------

| | | | | |
|---|---|---|---|---|
| அ. | குருணாகல் பேரூந்து நிலையத்தில் வெற்றிட மேவுகையின் மதிப்பீட்டு பெறுமதி ரூபா 14,232,000 ஆன 18 கடைகளை நிர்மாணிப்பதற்காக நகர பிதாவினால் நேரடியாக ஆளுனரிடமிருந்து அங்கீகாரம் பெறப்பட்டு கடைகளை வழங்குமாறு கோரிய விண்ணப்பதாரர்களுக்கு கேள்வி நடைமுறைகளுக்குப் புறம்பாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் உரிய அறிவித்தல்கள் பகிரங்கப்படுத்தப்பட்டு போட்டியாளர் கூறுவிலைகளின் அடிப்படையில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நீண்டகாலமாக தனியார் முதலீட்டாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையை கவனத்தில் கொண்டு கௌரவ நகர பிதாவினால் அதற்குரிய பெயர் பட்டியல் பொதுச் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. | முறையற்ற வகையில் அங்கீகாரம் பெற்று கடையினை வாடகைக்கு வழங்குதல் தற்போது மேற்கொள்ளப் பட்டுள்ளது. |
| ஆ. | இலுப்புகெதர வீதி நீர்க்குழாய் பதிக்கும் வேலையின் வேலை விடய இலக்கம் 02 இன் கீழ் பீ.வீ.சீ குழாய்களின் அடிப்படையில் ஆற்று மணல் ஈடுபடுத்துவதற்கு ரூபா 612,779 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் பௌதீக பரிசோதனையின் போது ஆற்றுமணல் இடப்படாதிருந்த இடங்கள் மற்றும் ஆற்று மணல் ஒரு அங்குலம் அளவிலான தடிப்பத்தில் இடப்பட்டிருந்த இடங்கள் காணப்பட்டது. அதன் பிரகாரம் | நிறைவேற்றப்படாத வேலைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் மீள அறவிடப்படல் வேண்டும். | ஆற்று மணல் போடும் போது போதுமான சகல இடங்களுக்காவும் சமமானதாக பிரயோக ரீதியில் பயன்படுத்த முடியாதிருந்ததுடன் இடத்தின் தன்மையின் பிரகாரம் பயன்படுத்தும் போது குறைந்து கூடி மேற்கொள்ளப் பட்டிருந்தது. தேவையான பிரகாரம் ஆற்று மணல் பீ.வீ.சீ குழாய் அடிப்படையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. | இது தொடர்பாக பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுவதுடன் நிறுத்தி வைத்தல் பணம் செலுத்தப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | செய்யப்படாத வேலைகளுக்காக ரூபா 510,649 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | | | |
| இ. | இலுப்புகெதர வீதியில் நீர்க்குழாய் பதிக்கும் முதலாவது ஒப்பந்தம் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் வீதி கீழிறங்கியிருந்ததன் காரணமாக காபட் இடுவதற்காக நீர்க் குழாய்கள் பதிக்கப்பட்ட வடிகாண் ஊடாக மண் அகற்றப்பட்டு மூடுவதற்கு ரூபா 4,000,000 புதிய மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருந்தது. இந்த வீதியை காபட் இடுவதாக சபை அறிவித்திருக்கும் போது நீர்க்குழாய்கள் பதிப்பதற்காக ஒரு வேலை விடயத்திற்காக 02 மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு கொடுப்பனவுகள் செய்யப்பட்டமையால் முதலாவது மதிப்பீட்டின் செலவின விடயம் 03 இற்காக செலவிடப்பட்ட ரூபா 1,208,305 தொகையான செலவினம் சபையின் கவனமில்லாமையின் அடிப்படையில் மேற்கொள்வதற்கு ஏற்பட்டிருந்த செலவினமாகும். | பொதுமக்களின் பணத்தை சிக்கனமானதாகவும், செயற்திறனான தாகவும், ஆக்கபூர்வ மானதாகவும் செலவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இந்த வீதியின் ஆரம்ப கட்டத்தில் காபட் இடுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட அகல அழவுக்கு மேலதிகமாக மேற்பகுதியில் (shoulders) அடிப்படையில் பீ.வீ.சீ நீர்க்குழாய்கள் பதிக்கப்பட்டிருந்தது. வீதியின் முதலாவது வடிகாணின் அருகில் (Drain edge to edge) காபட் இடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் ஒழுங்கமைக்கப் பட்டிருந்தது. அதன் போது நீர்க் குழாய்கள் பதிக்கப்பட்டிருந்த மேல் பகுதி (shoulders) மீண்டும் முறையாக தடிப்பமாக்குவதற்கு தேவையாக இருந்தமையால் காணப்பட்ட மண்ணை அகற்றி தடிப்பமாக்கப் பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்பின் பிரகாரம் பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| ஈ. | நகர பிதாவின் தனிப்பட்ட பிரத்தியேக வாகனத்திற்காக 2019 ஆம் ஆண்டு பெப்ரவரி முதல் யூலை வரை மற்றும் நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களுக்காக உத்தியோகபூர்வ வாகனப் படியாக மாதத்திற்கு ரூபா 250,000 வீதம் ரூபா 2,000,000 தொகையும், 2020 ஆம் ஆண்டின் சனவரி மற்றும் பெப்ரவரி மாதம் வரை மாதமொன்றிற்கு ரூபா 250,000 வீதம் ரூபா 500,000 தொகையும் முறையான அங்கீகாரமின்றி செலுத்தப்பட்டிருந்தது. மேலும், அந்த வாகனத்திற்காக 2019 ஆம் ஆண்டின் மார்ச் முதல் திசெம்பர் வரை ரூபா 726,596 பெறுமதியான 5,474 லீற்றர் எரிபொருள் 2020 சனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களுக்காக ரூபா 148,500 பெறுமதியான 1,125 லீற்றர் எரிபொருள் சபையினால் வழங்கப்பட்டிருந்தது. | கௌரவ நகர பிதாவிற்கு அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகபூர்வ வாகனப் படி செலுத்துவதற்கும் அங்கீகாரமின்றி செலுத்தப்பட்டுள்ள பணத்தை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கௌரவ ஆளுனர் ராஜா கொல்லுரே அவர்களினால் கௌரவ நகர பிதாவின் உத்தியோகபூர்வ வாகனப் படியாக மாதாந்தம் ரூபா 50,000 தொகை செலுத்துவதற்காக 2020.10.02 ஆந் திகதிய NWP/GOV/AO/07/34/01 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இதுவரை சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்ட ரூபா 250,000 கொடுப்பனவு கைவிடப்பட்டு ரூபா 50,000 தொகை உத்தியோகபூர்வ வாகனப் படியாக செலுத்தப்படுவதுடன் மேலதிகமாக செலுத்தப்பட்ட பணம் அந்த தொகையிலிருந்து ஈடுசெய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தற்போது வரையில் ரூபா 750,000 தொகையொன்று அறவிடப்பட்டுள்ளது. ஏதாவது மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்த தொகையை செலுத்தி முடிவுறுத்துவதற்கு முன்னர் கௌரவ நகர பிதாவின் பதவிக் காலம் முடிவடையுமாயின் அத்திகதியில் உள்ள மீதியை செலுத்துவதற்காக எழுத்து மூலம் இணக்கப்பாடு தெரிவிக்கப் பட்டுள்ளது. |
| உ. | மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 185(1) ஆம் பிரிவின் பிரகாரம் சகல மாநகர சபைகளிலும் மாநகர சபை நிதியமொன்று தாபிக்கப்பட வேண்டுமென | மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 215 இன் கீழ் பாதீட்டு மாற்றங்கள் காண்பிக்கப்பட்டிருந்த போதும், சட்டத்தில் | மாநகர சபை நிதியத்தின் மூலம் வருடாந்த பாதீட்டின் கீழ் 11472 செலவினத் தலைப்பில் நிதி ஒதுக்கப்பட்டிருந்ததுடன் | 2022 ஆம் ஆண்டு முதல் 11472 செலவினத் தலைப்பு சமூக மானியமாக பெயரிடப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆலோசனை வழங்கப்பட்ட போதும், நகராதிபதி நிதியமொன்று தொடர்பாக சட்டத்தின் ஏற்பாடுகள் வழங்கப்படாதிருக்கும் போது வருடாந்த பாதீட்டில் ரூபா 2,279,800 தொகையான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டு ரூபா 2,008,852 தொகை செலவிடப்பட்டிருந்தது. | நகராதிபதி நிதியமொன்று தொடர்பாக குறிப்பிடப்படா மையால் பல்வேறு நிதியங்களை தாபிக்காதிருத்தல் வேண்டும். | அதிகாரப் பிரதேசத்தில் நலன்புரி நடவடிக்கைகளுக்காக அந்த செலவுத் தலைப்பின் கீழ் சபையின் அங்கீகாரத்துடன் உதவிகள் வழங்கப்படுகின்றது. | |
| ஊ. | 2020 ஆம் ஆண்டின் இறுதியில் நிலுவை நீர்க்கட்டண மீதி ரூபா 64,549,182 ஆகும். அதில் ரூபா 75,000 அதிக மீதியொன்று காணப்படுகின்ற 52 நீர் நுகர்வோர்களுக்குரிய மீதி ரூபா 28,076,433 ஆகும். இந்த நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நீர்க்கட்டணத்தை அறவிடுவதற்கு முறையான திட்ட முறைமையொன்று பின்பற்றப்பட வேண்டியிருந்ததுடன் ஆண்டின் சிட்டையிடல்களை காலரீதியில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ரூபா 75,000 தொகைக்கு மேற்பட்ட மீதி காணப்படுகின்ற பத்து நீர் நுகர்வோர்கள் அரைவாசிக்கு மேல் செலுத்தியுள்ளனர். மூன்று நுகர்வோர்களுக்கு நீர் வழங்கல் துண்டிக்கப்பட்டுள்ளது. 21 நுகர்வோர்களின் நீர் இணைப்பு துண்டித்து சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. மிகுதி நுகர்வோர்களின் நிலுவைப் பணம் அறவிடப்படுகின்றது. | தற்போதும் நீர் கட்டணம் செலுத்தாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. |
| எ. | மாநகர சபையின் கள உத்தியோகத்தர்களுக்காக புதிய மென்பொருளின் கீழ் கடமை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ரூபா 2,046,000 தொகையான 60 டெப்ளட் கணனிகள் கொள்வனவு | தேவையின் பிரகாரம் கொள்வனவுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நீர்மானி வாசித்தல், ஆதனவரி சிட்டைகளை வழங்குதல், அனுமதியற்ற வியாபாரங்களை அகற்றுதல், நீர் பராமரிப்பு நடவடிக்கைகளை | அத்தியவசிய கடமைகளுக்காக இந்த டப் இயந்திரம் வழங்க வேண்டியிருந்த போதிலும் தேவையின்றி வழங்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | செய்யப்பட்டிருந்ததுடன் தேவையான மென்பொருள் Upload செய்து பயனுள்ள பணிகளில் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. துறைகளில் நீர் மானி வாசித்தல், ஆதனவரி சிட்டை விநியோகித்தல், விபத்திற்கு பங்களிக்கின்ற மரங்களை வெட்டுதல், அனுமதியற்ற வியாபாரங்களை அகற்றுதல், நீர் பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்கின்ற பணிகள் சபைக்கு டெப் கணனியை வழங்கும் தேவை என்பன கணக்காய்விற்கு உறுதிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | | மேற்கொள்கின்ற பதவியணியினருக்கு புதிய மென்பொருளின் கீழ் சேவையாற்றும் போது பொதுமக்களுக்கு செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் சேவையை நிறைவேற்றுதல் இலகுவாக இருப்பதன் மூலம் அதன் ஊடாக உயர் உத்தியோகத்தர்களை நேரடியாகத் தொடர்புபடுகின்றனர். தேவையான ஆலோசனை மற்றும் பிரச்சினையான நிலைமைகளை மாற்றியமைப்பதற்கு கடமை வலயைமைப்பை தொடர்ச்சியாக அமுல்படுத்துவதற்கு இந்த மென்பொருளை அமுல்படுத்துவதற்கு தேவையாக இருந்ததை குறிப்பிடுகின்றோம். | |
| ஏ. | தொல்பொருளியல் ரீதியிலான பெறுமதியுடைய மற்றும் நகர சபைக்கு வருமானத்தை பெற்றுக் கொள்ள முடியுமான பொது ஆதனமாக காணப்படுகின்ற புவநேக்க ஹொட்டல் அமைந்துள்ள கட்டிடம் முறையான அங்கீகாரமின்றி | தொல்பொருளியில் ரீதியான பெறுமதியுடைய கட்டிடங்களை உடைத்து அகற்றும் போது உரிய நிறுவனங்களின் அங்கீகாரம் மற்றும் பொதுச் சபைகளின் | மாநகர சபைக்கு சொந்தமான ஆதனமாக இருந்த பழைய உப மாவட்ட அதிபர் அலுவலகக் கட்டிடத்திற்குரிய உரிய மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் கீழ் | இது தொடர்பாக உயர் நீதிமன்றம், கௌரவ மேன் முறையீட்டு நீதிமன்றம், கௌரவ நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணையில் |

| | | | | |
|---|---|---|---|---|
| | உடைப்பதற்காக குருணாகல் மாநகர சபையின் உயர் முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருந்தது. இதற்காக தொல்பொருளியில் திணைக்களத்தின் முன் அங்கீகாரம் மற்றும் பரிந்துரை பெறப்படாதிருந்ததுடன் 2020 யூலை மாதம் 14 ஆந் திகதி புதிய கட்டிடம் உடைத்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இந்த சம்பவம் தொடர்பாக பொறுப்பு வாய்ந்தவர்களாக பெயர் குறிப்பிடப்பட்டு பிடியாணை பிறப்பிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்காக ரூபா 7,800,000 தொகை வழக்குக் கட்டணமாக நகர சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. | அங்கீகாரம் பெறப்பட வேண்டும். | கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் தமது தீர்மானம் மற்றும் பணிகளை செயற்படுத்தும் போது மாநகர சபை சுயமாக நடவடிக்கை எடுத்திருந்தது. மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சட்டரீதியான தன்மையுடைய உரிய வழக்குக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ள மையும் குறிப்பிடுகின்றோம். | உள்ளது. |
| ஐ. | மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 36(1)(III) ஆம் பிரிவின் பிரகாரம் ஏதாவதொரு ஆதனமொன்றை விற்பதற்கோ அல்லது உரித்தற்றதை உரித்தாக்கிக் கொள்வதற்கோ அதிமேதகு சனதிபதியின் எழுத்துமூல இணக்கப்பாட்டினை பெறாமல் அல்லது அந்த ஆதனங்களை விற்பதற்கோ | மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 361(ii) ஆம் பிரிவின் பிரகாரம் முறையாக காணி அகற்றுவதற்கும் மாநகர சபைக்கு சொந்தமான காணிகளை பாதுகாத்துக் கொள்வதற்கும் காணிகளை | மாநகர சபையினால் GC/06/53/2020/12/10 ஆம் இலக்க சபை அங்கீகாரத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்டிருந்த மையினால் தற்போது குடியிருக்கின்ற குடியிருப்பாளர் களுக்காக அந்தக் காணி முறையான பிரகாரம் ஒழுங்குபடுத்தப்பட்டு | சட்டங்கள் விதிகளின் பிரகாரம் காணியினை அகற்றுதல், முறைமைப்படுத்து வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்த துடன் தற்போது இந்த முறையிலேயே முறையற்ற வகையில் காணிகள் அகற்றப்படுகின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அல்லது உரித்தற்றதாக்குவதற்கோ சபைக்கு அதிகாரம் காணப்படாதிருந்த போதிலும் வெஹெரவத்த மாநகர சபைக்குச் சொந்தமான காணி சட்டரீதியாக கையளிப்பதற்கு மாநகர சபை அங்கீகாரம் பெற்று அகற்றப்பட்டிருந்தது. | வாடகைக்கு வழங்கும் போது கேள்வி முறைமை பின்பற்றுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 40 I (உ) II ஆம் பிரிவுகளின் பிரகாரம் கௌரவ ஆளுனரின் அங்கீகாரமின்றி அகற்றுவதற்கு அங்கீகாரம் காணப்படுகின்ற மையினாலும் மாநகர சபையின் அங்கீகாரத்தின் இந்த காணி ஒழுங்குபடுத்தப்பட்டு சட்டரீதியான உரித்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | |
| ஒ. | அரசாங்கத்தின் காணி கட்டளைச் சட்டத்தின் 27 ஆம் பிரிவு மற்றும் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 36(1) ஆம் பிரிவுகளுக்கு இணங்காமையால் மாநகர சபை அங்கீகாரம் மற்றும் நகராதிபதியினால் நேரடியாக ஆளுனருக்கு முகவரியிடப்பட்ட கடிதத்திற்கு ஆளுனர் கையொப்பம் இடல் போன்ற முறையற்ற நடைமுறையின் அடிப்படையில் 03 காணிகளை வாடகைக்கு | மாநகர சபைகளின் காணிகளை வாடகைக்கு வழங்கும் போது மாநகர சபைகள் கட்டளைச் சட்டம், அரசாங்கத்தின் காணி கட்டளைச் சட்டம் மற்றும் உரிய சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அரசாங்கத்தின் மதிப்பீட்டை பெற்று | மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஏற்பாடுகளின் பிரகாரம் அதிமேதகு சனாதிபதி அவர்களின் எழுத்துமூல இணக்கப்பாடு பெறப்படும் வரை சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் மூன்று காணிகளும் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் கையளித்தல் கட்டளை கிடைத்த பின்னர் அதிமேதகு சனாதிபதி அவர்களின் | சட்டங்கள், விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் அரசாங்கத்தின் காணிகள் மற்றும் நகர சபைக் காணிகள் அகற்றுதல் மேற்கொள்ளப் படுகின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அரசாங்கத்தின் காணியை கையளித்தல் தொடர்பாக உள்ள வழிகாட்டல்களின் ஆலோசனைகளின் இலக்கம் எஸ்.ஈ.ஐ/ஏ/4/34 மற்றும் 1995.07.12 ஆந் திகதிய சனாதிபதி செயலாளரின் சுற்றறிக்கையின் பந்தி இலக்கம் 07 இன் பிரகாரம் பிரதான மதிப்பீட்டாளரினால் நடாத்தப்பட்ட சந்தை மதிப்பீட்டின் அடிப்படையில் பின்பற்றப்பட்ட வாடகை தீர்மானிக்கப்பட்டு வாடகை அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் வருமான பரிசோதகரின் அடிப்படையில் மேற்கூறப்பட்ட வாடகைக்கு வழங்குதல் இடம்பெற்றிருந்தது. | முறையாக வாடகை உடன்படிக்கை கைச்சாத்திடல் வேண்டும். | அங்கீகாரத்திற்கு அனுப்புவதற்கு தீர்மானிக்கப் பட்டிருந்தது. | |
| ஓ. | மாநகர சபையின் கீழ் நிருவகிக்கப்படுகின்ற முன்பள்ளி பாடசாலைகளுக்காக விளையாட்டு உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு 4,481,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இந்த கொள்வனவுகளுக்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அறிக்கையொன்று கோவையில் காணப்படாதிந்ததுடன் அதன் பிரகாரம் தொழில்நுட்ப | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க சபை நிதியத்தை செலவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | உரிய உபகரணங்கள் தொடர்பாக விசேட அறிவினை கொண்டுள்ள கடமையில் இயந்திர உபகரண அதிகார சபையின் பரிந்துரையின் அடிப்படையில் அந்த உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டது என குறிப்பிடுகின்றோம். மீண்டும் வழங்குதலை மேற்கொள்கின்ற போது உரிய பொருட்களை வழங்குவதற்காக பதிவு | கொள்வனவு நடைமுறைகளில் உள்ள குறைபாடுகளை சரி செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | மதிப்பீடின்றி இந்த உபகரணயங்கள் பெறப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இந்த நிறுவனம் தொடர்பாக பரீட்சிக்கும் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்தது முன்பாடசாலை உபகரணங்களைவ ிற்பனை செய்கின்ற நிறுவனம் அல்லாதிருந்தமையால் இந்த கொள்வனவுகளில் மோசடிகள் மேற்கொண்டு அரசாங்கத்திற்கு நலன்கள் பெறக்கூடிய வகையில் பெறுகை நடைமுறைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | | உரித்துள்ள வழங்குனரிடம் கொள்வனவுகளை மேற்கொள்வதற்கான இயலுமை தொடர்பாக கண்டறியுமாறு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | |
| ஔ. | மத்திய சந்தையினை நிர்மாணிப்பதற்காக ரூபா 687,068,527 தொகையான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ரூபா 948,518,334 தொகை ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. இந்த நிர்மாணத்திற்குரிய பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.14.1 ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சின் பெறுகைகள் குழுவினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்த பெறுகைகள் தொடர்பாக பெறுகைகள் மற்றும் மதிப்பீட்டுக் குழுவை நியமித்தல் மற்றும் கேள்வி அறிவித்தல்களை தயாரித்த | மதிப்பீடு BSR (அங்கீகரிக்கப்பட்ட கட்டிடம்) இன் பிரகாரம் தயாரிக்கப்பட வேண்டியிருந்ததுடன் பெறுகைகள் வழிகாட்டி கோவையின் பிரகாரம் கேள்வியினை கையளித்து பொறியியலாளர் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தரின் மேற்பார்வையின் கீழ் நிர்மாணங்கள் நியமப்படல் வேண்டும். | சரியான பிரகாரம் பொதுச்சபை தீர்மானத்திற்கு இணங்க வடமேல் பொறியியலாளர் திணைக்களத்தின் விசேட சபையின் மூலம் தேவையான தொழில்நுட்ப ஆலோசனை வழங்கப்பட்டு ஆரம்ப மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்ட குறைபாடுகளான ஆரம்ப விடயத்தில் (Preliminaries) மற்றும் மத்திய வளிப்பதனாக்கி முறைமை (Central A/C | தற்போதும் பெரிய அளவிலான நிர்மாணங்களை மேற்கொள்ளப் படுவதுடன் நகர சபையில் இந்த நிர்மாணங்களை அங்கீகரிப்பதற்காக உரிய தரத்தில் பொறியியலாளர் காணப்படவில்லை. பெறுகை குழு நகர சபை பொறியியலாளர் மற்றும் உறுப்பினர்களை உள்ளடக்கிய குழுவொன்றினால் தீர்மானிக்கப் |

| | | | | |
|---|---|---|---|---|
| | உள்ளடக்கிய கேள்வி ஆவணங்களை தயாரித்தல், கேள்வி குழு கூட்டங்களை நடாத்துதல், கேள்வி அறிவித்தலை பகிரங்கப்படுத்துதல், கேள்வி விடயங்களை பெற்றுக் கொள்ளல், கேள்வி மதிப்பீடுகளை உள்ளடக்கிய பெறுகை நடைமுறைகள் முழுவதிலும் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. இந்த பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி முதல் கேள்வி கையளிக்கப்படும் வரையான காலத்தில் உரிய நடவடிக்கைகள் தொடர்பாக உள்ள தரப்பினர் மற்றும் நிறுவனங்கள் பொறியியலாளர் மதிப்பீட்டை விஞ்சி ரூபா 281,934,447 தொகை அதாவது 41 சதவீதத்தை விஞ்சிய கூறுவிலைகள் சமர்ப்பித்த கேள்விதாரருக்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. | | System) மீண்டும் தயாரிக்கப்பட்டு மதிப்பீடு பெற்று திருத்தங்கள் மேற்கொண்டு GC-06(04)-2020.02.13 ஆம் இலக்க பொதுச்சபை அங்கீகாரம் மற்றும் பெறுகை வழிகாட்டிக் கோவைக்கு இணங்க கேள்வி கையளிக்கப்பட்டுள்ளது. | படுகின்றது. அதன் பிரகாரம் பெறுகை நடைமுறைகளை முறைமைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| க. | கௌரவ நகராதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்திற்காக திட்டமிடப்பட்ட நிர்மாண முறைமை தெரிவு செய்யப்பட்டிருந்த போதிலும் மாநகர சபையின் சிவில் பொறியியலாளர் மற்றும் ஏனைய சகல வளங்களும் | மாநகர சபையின் நிர்மாணங்களை மேற்கொள்ளும் போது மாநகர சபைக்கு உரிய நலன்கள் பெறக்கூடிய பெறுகை திட்டம் தெரிவு செய்யப்பட்டு | கௌரவ நகராதிபதி நகரத்தின் முதலாவது நபராக இருந்ததுடன் அதிமேதகு சனாதிபதி மற்றும் கௌரவ அமைச்சரவை உள்ளிட்ட VIP நபர்கள் இந்த உத்தியோகபூர்வ இல்லத்திற்கு வருகை | பொதுமக்களுக்கு சேவையினை அர்ப்பணிப்புடன் உள்ள பொதுமக்கள் பிரதிநிதிகளின் ஆகக்குறைந்த செலவினங்களை வழங்குதல் மற்றும் சேவை மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| காணப்படுகின்ற போதும், மற்றும் ஏனைய தொழில்நுட்ப உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்காக இயலுமை காணப்படுகின்ற போதும், மாநகர சபைக்கு மிகவும் நலன் பெறக்கூடிய வகையில் ஆகக்குறைந்த கிரயத்தில் உத்தியோகபூர்வ இல்லத்தை நிர்மாணிப்பதற்கான சந்தர்ப்பங்கள் இழக்கப்பட்டிருந்தது. அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 6.2.2 இன் பிரகாரம் அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டிருந்த போதிலும், உரிய காலத்தை வழங்காமை மற்றும் இரண்டாவது சந்தர்ப்பத்தின் போது ஒப்பந்தகாரரின் தகைமைகளில் திருத்தங்கள் கட்டுப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்தின் தரைமாடி மற்றும் முதலாவது மாடிகளை கொண்டுள்ளமையினால் மின்பாரந்தூக்கியொன்றை (Lift) பொருத்துவதற்கான தேவை காணப்படாத போதிலும் ரூபா 4,129,600 செலவில் மின்பாரந்தூக்கி பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். நிர்மாணங்களை மேற்கொள்கின்ற போது நிர்மாணப் பொருட்களின் தரத் தன்மை, நியமத்தின் பிரகாரம் வேலைகளை பூர்த்தி செய்தல் பரீட்சிக்கப்பட வேண்டும். | தருவதுடன் களப் பரிசோதனைக்காக வருகை தந்த சந்தர்ப்பத்தின் போது இந்த உத்தியோகபூர்வ இல்லத்தில் தங்குவதற்கு இடமளிக்கப்படுகின்ற மையால் இதற்காக மின்பாரந்தூக்கி பொருத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. மேலும் நகராதிபதியை சந்திப்பதற்கு பொதுமக்கள் வருகை தருகின்ற சந்தரப்பத்தில் ஊனமுற்ற நபர்கள் வருகை தருகின்ற போது அவர்களுக்கு நேரடியாக நகராதிபதியை சந்திப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கும் வகையில் இந்த மின்பாரந்தூக்கியை பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான அவதானிப்புக்கள் காணப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| கா. | மாளிகாபிட்டிய கேட்போர்கூடத்தை நிர்மாணிப்பதற்காக பொறியியலாளர் மதிப்பீடு ரூபா 165,207,414 தொகையான ஒப்பந்தத்திற்காக கூறுவிலை கோரலின் பிரகாரம் ரூபா 185,456,135 தொகை மற்றும் ரூபா 300,655,750 ஆக இரண்டு கூறு விலைகள் கிடைத்திருந்தது. இந்த கூறுவிலைகள் பெறுகைகள் வழிகாட்டியின் 7.9.2 இன் பிரகாரம் ரூபா 500 மில்லியனை விஞ்சாதிருந்த ஒப்பந்தங்களின் விரிவான கேள்வி மதிப்பீடு பொதுவான தத்துவங்கள் மற்றும் முறைமைகள் பின்பற்றப்படாமல் மற்றும் ஆகக்குறைந்த கேள்வி பொறியியலாளர் மதிப்பீட்டினை விட 18 சதவீதத்தினால் அதிகரித்திருந்த போதும், ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையில் வழங்கப்பட்டுள்ள ஆலோசனையின் பிரகாரம் பெறுகை முறைமை தெரிவு செய்து கேள்வி மதிப்பீட்டு விலையின் முரண்களை கவனத்தில் கொண்டு ஒப்பந்தங்கள் கையளிக்கப்படல் வேண்டும். | பெறுகைகள் வழிகாட்டிக் கோவை மற்றும் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | உரிய சட்ட விதிகளில் பெறுகைகள் மற்றும் நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. |

## 21. கல்முனை மாநகர சபை

-------------------------------------------

| | | | | |
|---|---|---|---|---|
| அ. | மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 252(1)(ஆ) பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் அதிகார பிரதேசத்திற்குரிய பிரிவுகளிலுள்ள அசைவுறாத | குறித்த காலப் பகுதியின் போது நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தற்போதும் அறவிடப்படாது காணப்படுகின்ற வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை | நிலுவைப் பணம் அறவிடப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | 47,900 ஆதனங்கள் மற்றும் காணிகளிலிருந்து ஒரு வருடத்திற்கு மேற்பட்டு அறவிட வேண்டிய ஆதனவரி ரூபா 91.6 மில்லியன் 2020 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | | எடுக்கப்பட்டுள்ளது. | |
| ஆ. | 1987 ஆம் ஆண்டு முதல் நிலுவையாக காணப்படுகின்ற பொதுச் சந்தை வாடகை ரூபா 12,314,393 தொகை, இறைச்சிக்கடை வாடகை ரூபா 7,661,912 தொகை மற்றும் கடை வாடகை ரூபா 13,657,443 தொகை என்பவற்றை அறவிடுவதற்கோ அல்லது புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்படாமல் நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டுவரப்பட்டிருந்தது. | வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எதிர்காலத்தில் அதிக கவனம் செலுத்தப்படும். | வருமானங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| இ. | 1996 ஆம் ஆண்டு முதல் நிலுவையாக காணப்படுகின்ற முச்சக்கரவண்டி மற்றும் வாகன பாதுகாப்பு வரிகள் ரூபா 3,394,613 தொகையை அறவிடுவதற்கோ அல்லது புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்படாமல் தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டுவரப்பட்டிருந்தது. | வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எதிர்காலத்தில் அதிக கவனம் செலுத்தப்படும். | வருமானங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| ஈ. | 2020 ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் பேரூந்து நிலையத்தில் நிலுவைக் கடை வாடகை ரூபா 4,219,400 தொகை, கல்முனை சந்தையில் கடைகளின் நிலுவை வாடகை ரூபா 3,907,615 தொகை, ஐக்கிய சதுக்கத்தின் கட்டிடத் தொகுதியில் கடைகளின் நிலுவை வாடகை ரூபா 1,735,750 தொகை, வாழைப்பழக் கடை நிலுவை வாடகை ரூபா 613,995 மற்றும் தனியார் பேரூந்து நிலைய கடை நிலுவை வாடகை ரூபா 450,000 என்பவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வருமானத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | உரிமையாளர்களுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | நிலுவை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| உ. | மாநகர சபை அதிகாரப் பிரதேசத்திற்குரிய பொதுச் சந்தைகள் அமைந்துள்ள இடங்களுக்கு அருகில் உள்ள தனியார் கடைகள் மாதாந்தம் ஆகக்குறைந்தது ரூபா 10,000 முதல் ரூபா 20,000 வரையான வீச்சில் வாடகைக்கு வழங்கப்படுகின்ற போதும் மாநகர சபைக்குரிய இந்த கடைகள் புதிய கூறுவிலை கோராமல் 1980 முதல் மாதாந்த வாடகை ரூபா 500 முதல் ரூபா 4,000 வரையான வீச்சில் வாடகைக்கு | வாடகை வருமானத்தை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தற்போது நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | சபைக்குரிய 435 கடைகளுக்குரிய தற்போதைய கூறுவிலைகளை கோராமல் 1980 ஆம் ஆண்டில் காணப்பட்ட கடை வாடகையின் அடிப்படையில் 2022 ஆம் ஆண்டின் போதும் கடைகள் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தன. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வழங்கப்பட்டிருந்தது. இதனால் சபைக்கு வருடாந்தம் அண்ணளவாக ரூபா 60 மில்லியன் உரித்தற்று போயிருந்தது. | | | |
| ஊ. | கல்முனை மற்றும் சாய்ந்தமருது பிரதேசங்களில் சிறுவர் கடற்கரைப் பூங்காவினை நிர்மாணிப்பதற்காக முறையே ரூபா 26,780,072 மற்றும் ரூபா 8,267,830 தொகைகள் செலவிடப்பட்டிருந்தன. எனினும், அவை சபையினால் பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்படுவதுடன் அதில் பொருத்தப்பட்டுள்ள உபகரணங்கள் பாதுகாப்பற்ற நிலையில் காணப்பட்டது. | சிறுவர் பூங்காவினை பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | உரிய பூங்காவிற்கு தற்போது பாதுகாவலர் ஒருவர் நியமித்து பேணிச் செல்லப்படுகின்றது. | சிறுவர் பூங்காவை பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

## 22. அக்கரைப்பற்று மாநகர சபை

--------------------------------------------------

| | | | | |
|---|---|---|---|---|
| அ. | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொதுச் சந்தைகளின் கடை நிலுவை வாடகை ரூபா 7,699,381 தொகையை அறவிடுவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வருமானங்களை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வாடகை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| ஆ. | 2014 ஆம் ஆண்டில் தீயணைப்பு அலகினை ஆரம்பிப்பதற்காக ரூபா 19,882,270 செலவில் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்தின் நிர்மாணங்கள் | உரிய செயற்திட்டத்தை விரைவாக பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இதனை பூர்த்தி செய்வதற்கு மேலதிக நிதியேற்பாடு கோரப்பட்டுள்ளது. | 2022 சனவரி வரையிலும் கட்டிட நிர்மாணத்தின் நிதி மற்றும் பௌதீக செயல்முன்னேற்றம் முறையே 40 |

| | | | | |
|---|---|---|---|---|
| | பூர்த்தி செய்யப்படாத நிலைமையில் 07 வருட காலமாக கைவிடப்பட்டிருந்தது. | | | சதவீதம் மற்றும் 30 சதவீதமான கீழ் மட்டத்தில் காணப்பட்டது. |
| இ. | நெல்சிப் நிகழ்ச்சித் திட்டத்தில் தாபிக்கப்பட்ட சிறுவர் பூங்காவில் சிறுவர் மின் புகையிரதம் 2018 ஆம் ஆண்டு முதல் செயலிழந்தமையினால் ரூபா 2.3 மில்லியன் நிதி விளைவற்றுக் காணப்பட்டது. | சிறுவர் மின் புகையிரதத்தை விரைவாக செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | சிறுவர் மின் புகையிரதத்தை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சிறுவர் மின் புகையிரதத்தை பழுதுபார்ப்பதற்கு சபை நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக 2022 சனவரி வரையிலும் சிறுவர் மின் புகையிரதம் ஓட்டத்தில் ஈடுபடுத்த பட்டிருக்கவில்லை. |
| ஈ. | கழிவுப் பொருட்களிலிருந்து கூட்டுப்பசளை உற்பத்தி செய்வதற்காக ரூபா 999,500 செலவில் 2018 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டு பொருத்தப்பட்டிருந்த இயந்திரம் 2020 மே 15 ஆந் திகதி வரையிலும் முழுமையாக பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மீண்டும் அந்த செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பொதுமக்கள் எதிர்ப்பு காண்பித்தமையின் காரணமாக கூட்டுப்பசளை உற்பத்தியை விரைவுபடுத்துவதற்கு முடியாதிருந்தது. | சொத்துக்கள் ஆக்கபூர்வமாக பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை. |

## 23. யாழ்ப்பாணம் மாநகர சபை

---------------------------------------------

| | | | | |
|---|---|---|---|---|
| அ. | சபை பயன்படுத்திய வாகனமொன்று 2014 யூன் மாதத்தின் போது விபத்திற்கு உட்பட்டமை தொடர்பாக தாபன விதிக் கோவையின் | இந்த இழப்பீட்டை தாமதமின்றி தீர்த்து வைத்தல் வேண்டும். | ஆணையாளரின் கோரிக்கையின் பிரகாரம் மீண்டும் விசாரணையொன்று நடாத்தப்படுகின்றது. | இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | XLVIII ஆம் அத்தியாயத்தின் 1 ஆவது பகுதியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் சபை நிதியத்திலிருந்து ரூபா 1,958,200 தொகை செலவில் பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | | | |
| ஆ. | 2016 ஆம் ஆண்டின் போது சபையின் முகாமைத்துவ உதவியாளர் ஒருவரினால் மோசடியாக பெறப்பட்ட பணத்தில் ரூபா 2,614,429 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மோசடி செய்யப்பட்ட பணம் அறவிடப்படல் வேண்டும். | சபையினால் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. அவ்வாறே பொலிசிலும் வழக்குத் தொடுத்து தற்போது இரண்டு வழக்குகளும் விசாரணையில் உள்ளது. | பணம் அறவிடப்பட்டிருக்க வில்லை. |

**24. மட்டக்களப்பு மாநகர சபை**

----------------------------------------------

| | | | | |
|---|---|---|---|---|
| அ. | உயிரியல் வாயு உற்பத்திக்காக ரூபா 2 மில்லியன் செலவிடப்பட்ட போதிலும் எதிர்பார்த்த விளைவுகள் அடையப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் வருமானங்களை உழைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தொழில்நுட்ப வசதிகள் நலிவாக இருந்தமையால் பகிர்ந்தளித்தல் தொடர்பான பிரச்சினைகள் காணப்படுகின்றது. | எதிர்பார்த்த விளைவுகள் பெறப்பட்டிருக்க வில்லை. |
| ஆ. | மாநகர சபை அதிகார பிரதேசத்திற்குரிய தனியார் காணியொன்று கூறுகளாக்கப்பட்டு விற்பனை செய்யப்படும் போது அதில் ஒரு பகுதி மாநகர சபைக்கு | பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | இலஞ்சம் ஊழல் ஆணைக்குழுவில் விசாரணை நடைபெறுகின்றது. | நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பொது வசதிகளுக்காக கையளிக்கப்படல் வேண்டும். இவ்வாறு மாநகர சபைக்கு கையளிக்கப்பட்ட 97 பேர்ச் அளவு பல மில்லியன் ரூபா பெறுமதியுடைய 05 காணிகள் முன்னாள் ஆளுனரினால் அவரின் மனைவியின் பெயரில் அவருக்கு 2003 - 2006 காலப்பகுதியின் போது கையளிக்கப்பட்டிருந்தது. | | | |
| இ. | கிழக்கு மாகாண சபையிலிருந்து வழங்கப்பட்ட மூலதன அடிப்படையிலான மானியம் (CBG) ரூபா 10.4 மில்லியன் தொகை உரிய நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படாமல் 04 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் தொடர்ச்சியாக வங்கி நடைமுறைக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. | சொத்துக்களை பயன்படுத்துவதற்கோ அல்லது வருமானங்களை உழைப்பதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஆவணங்களை பெற்றுக் கொண்டதன் பின்னர் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதியத்தை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |